# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

"போர்வாள்" நிலையம்
பவழக்காரந் தெரு,
சென்னை 1.

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
இரா. இளஞ்செழியன், B.A. (Hons.).

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

| வாள் 4 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1982 மாசி 19<br>3—3—51 சனிக்கிழமை | வீச்சு 26 |
|---|---|---|


மேல் நாட்டுக் கதை

## "தூக்குக் கயிறு"

இரா. இளஞ்சேரன்

கி. பி. 1649-ம் ஆண்டு!

இங்கிலாந்தே இரத்தத் தடாகமாக—இருபாடி வீடுகளாகக் காட்சியளித்த காலம்! இரண்டு கட்சிகள். சார்லஸ் முதல்வனும் (CharlusI) அவனது படைகளும் ஒரு கட்சி. தலைவர் ஆலிவர் கிராம்வெல்லும், மக்களும் மற்றொரு கட்சி. இருசேனைகளும் எதிர்த்துக்கொண்டன, மேகங்கள் மோதுவதைப் போல! மக்கள் சிருஷ்டித்த சூறாவளியில் சார்லஸின் சிம்மாதனம் உருண்டது! அவனது கிரீடம் பறந்தது! கொற்றவனது கொடுங்கோல் ஒடித்தெறியப்பட்டது, மக்களால்! மன்னனின் படை மண்ணைக் கவ்வியது! சார்லஸ் ஓடினான் ஸ்காட்லாந்திற்கு! அங்குள்ளோரால் மீண்டும் இங்கிலாந்திற்கு இழுத்துவரப்பட்டான்! பொதுமக்களின் உள்ளத்தில் தீப்பொறிகள் தெறித்தன! நீதி பேசியது! மன்னனுக்கு மரணதண்டனை! எந்த மாளிகையிலிருந்து இன்பத்தில் மிதந்தானோ — அந்த மாளிகையின் வாயிலில் அவன் வாழ்விற்குக் 'தவணை' வழங்கப்பட்டது! எந்த மாளிகையிலிருந்து ஏழைகள் "பிடி உணவு போடுங்கள்" என அலறியபோது இடிபோல நகைத்தானோ—அந்த மாளிகையே அவனுக்கு மயானமாக மாறியது! எந்த மாளிகையிலிருந்து பஞ்சைகளின் 'சவங்கள்' சுருண்டு விழுந்தபோது வஞ்சிகளிடம் கொஞ்சினனோ — அந்த மாளிகையின் முன் சார்லஸின் சாவுக்களம் சிருஷ்டிக்கப்பட்டது! அரசனின் தலை துண்டிக்கப்பட்டது! முண்டம் துடித்தது! ரத்தம் தெறித்தது! மக்கள் மகிழ்ந்தனர்! அக்கிரமம் அழிந்தது!

### 1

"நிக்கோலஸ்! சில விஷச்செடிகள் வீழ்த்தப்படாமலிருக்கின்றன. அவைகளைக் கிள்ளி எறியவேண்டும். இல்லாவிடில் தொல்லைதான்!" கிராம்வெல் நிக்கோலஸிடம் கூறினார்.

"யாரைச் சொல்கிறீர்கள்?"

"புரட்சியின்போது குற்றவாளிகளாகப் பிடித்தோமே, சார்லஸின் சேனைத் தலைவர்களைத்தான் சொல்கிறேன். அந்த விஷப் பாம்புகளை நாளை விசாரணை செய்யவேண்டும். குயில்கள் உலவும் ஊரில் கழுகுகளை வைத்திருப்பது, கொடுமைக்கு நாமே 'அச்சாரம்' கொடுப்பதைப் போலாகும். கிளிகள் வசிக்குமிடத்தில் காட்டுப்பூனைகளை வளர்த்துவது வம்பில் முடியும்! துரோகிகள் தூக்குமேடை ஏறட்டும்."

"தாங்கள்......?"

"வெளியூர்ப் பிரயாணம். விரைவிலேயே தருப்புவேன்; வந்ததும் சந்திக்கலாம். வரட்டுமா?"

"சித்தம்."

நிக்கோலஸ் விசாரணை செய்ய வேண்டியவர்களின் பெயர் விபரங்களை பார்வையிட்டான். பல பெயர்கள் அவன் விழிகளில் அடி-

(7-ம் பக்கம் பார்க்க)

# அறப்போர் புரிந்த அஞ்சா நெஞ்சர்

[ தில்லை வில்லவன் ]

1905-ம் ஆண்டு, ஜனவரி மாதம், ஒன்பதாம் நாள். ரஷ்ய வரலாற்றிலே "இரத்த ஞாயிறெ"ன்று பொறிக்கப்பட்ட பொன்னாள்! ரஷ்யாவிலே தற்பொழுது ஸ்டாலின் கிராட் என வழங்கும் செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகரம்.

அன்று. அங்கே, ரஷ்யபுரட்சி சரிதத்தின் முதல் ஏடு புரட்டப்பட்டது! ஆம், அன்று ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், மாணவர்களுமாக லட்சக்கணக்கான மக்கள் ரஷ்ய மன்னன் ஜாரின் அரண்மனையை நோக்கி ஊர்வலமாக சென்றார்கள். "மன்னனே! நாங்கள் இம்மாநகர தொழிலாளர்கள். பாடுபடும் பாட்டாளிகள். உங்கள் ஆட்சியிலே எங்களுக்கு வாழ வசதியில்லை. ஆதரவு நாடி தங்களிடம் வந்துள்ளோம். நிலையை உணர்ந்து வாழ வகை செய்யுங்கள்." என்ற கருத்தைக் கொண்ட மனு ஒன்றையும் ஏந்திச் சென்றார்கள் புவியாளும் புரவலனை நோக்கி! ஆனால்...?

மக்களைக் காக்க ஆட்சிப் பீடமேறிய ஜார் மன்னன் வாயிலிருந்து மக்களைச் சுடுமாறு ஆணை பிறந்தது! அவ்வளவுதான்! துப்பாக்கிக் குழாய்கள் குண்டுகளைக் கக்கின. வாழ முடியாது தவிக்கும் மக்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டனர்! அம் மாநகரத் தெருக்களிலே அன்று இரத்த ஆறு ஓடியது! எப்பக்கம் திரும்பினாலும் இரத்தம்! நிரபராதிகளின் இரத்தம்! ஏழைகளின் இரத்தம்!

அன்று நடந்த ஆளும் ஆட்சியின் அடக்குமுறையைக் கண்டான் கார்க்கி! அந்த அடக்குமுறைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் பலியிடப்பட்டதைக் கண்டான்! கழுகுகள் கொத்தித் தின்னும் ஏழை மக்களின் பிணக் குவியல்களைக் கண்டான்! அப் பிணங்களிலிருந்து வழிந்தோடிய இரத்தம் பனிபடர்ந்த தெருக்களிலே படிந்து, தெருவெல்லாம் சிவப்பாகத் தோன்றியதைக் கண்டான்!

வழவழப்பான மேசையில் உணவுவகைகளைப் பரப்பி வயிறு புடைக்கத்தின்று ஏப்பம் விடும் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல கார்க்கி. நீராவிப்படகிலே எலும்பொடியப் பாடுபட்டு வாழும், ரொட்டிக்கிடங்கிலே எஜமானர்களின் சவுக்கடிபெற்று உழைத்துக் காலந்தள்ளும், சமுதாயத்தின் அடித்தளத்திலே போட்டு நசுக்கப்படும், இன்பம் என்றால் என்ன என்று கேட்கும் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவன் கார்க்கி!

1868-ம் ஆண்டு மார்ச் மாதம் பதினேழாம் தேதி ரஷ்யாவிலுள்ள நிழனிநோவா கோரட்டில் பிறந்து, தன் அறியாப் பருவத்தில் பெற்றோரை இழந்து, இரும்பு நெஞ்சம் படைத்த சுற்றத்தாரிடம் வாழ விரும்பாது, சிறுவயதிலேயே— பத்தாம் வயதிலேயே — நாடோடியாகக் கிளம்பினவன் கார்க்கி! படிப்பு அரசிளங் குமரர்களுக்கும், பணக்காரப் பிள்ளைகளுக்கும். செல்வச் சீமான்களின் செல்லப் பிள்ளைகளுக்கும், மதகுருக்களின் மகன்களுக்கும் ஏகபோக உரிமையாயிருந்ததால் உள்ளத்திலே எழுந்த படிக்கவேண்டுமென்ற ஆசை எண்ணங்களை யெல்லாம் அடக்கி, சிறுவயதிலிருந்தே நீராவிப்படகிலும், செருப்புக் கடையிலும், ரொட்டிக் கிடங்கிலுமாக வேலைசெய்து வாழ்க்கையை நடத்தியவன் கார்க்கி!

வேலை செய்த இடங்களிலெல்லாம் கொடுமை தாங்க முடியாது வேலையை உதறித்தள்ளி எழுத்தாளர் உலகுக்குத் திரும்பினவன் கார்க்கி! தான் பழகிய குடிகாரர்கள், கொலைகாரர்கள், திருடர்கள், காலிகள், பிச்சைக்காரர்கள், புரட்சிக்காரர்கள் — ஆகிய பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கையை நனகு ஆராய்ந்து அம் மக்களின் வாழ்வு மேன்மை யடைய, புரையோடிப்போன சமுதாயத்தைப் புதுமைபடுத்த கதைகளும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி மக்களின் அன்பையும் ஆதரவையும், அரசாங்கத்தின் கண்காணிப்பையும் பெற்றுவிட்டவன் கார்க்கி!

அந்த கார்க்கி அன்று நடந்த போராட்டத்தை — அரசனுக்கும் உழைப்பாளிகளுக்கும் நடந்த போராட்டத்தைக் — கண்டு இரத்தக் கண்ணீர் வடித்தான். ஆனால் அடுத்த வினாடி நடுங்கும் கரத்தில் பேனாவை ஏந்தினான். அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதற்குக் காரணம் ஜார் மன்னனே என்று விளக்கமாகப் பத்திரிகைகளில் எழுதினான். அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்கைப்பற்றி எழுதினான்! அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து எழுதினான். அதோடு ஜாரின் கொடுங்கோலாட்சிக்குச் சாவுமணியடிக்க மக்களை ஒருமாபெரும் புரட்சிப் போராட்டத்துக்கு அறைகூவி அழைத்தான் தன் எழுத்துக்கள் மூலம். ஆனால் அதன் விளைவு......?

அரசாங்கம் கார்க்கியைச் சிறையிலடைத்தது. கார்க்கிக்கு சிறை புதிதல்ல! இரகசியப் புரட்சி இயக்கத்தில் இருந்தபோது சிறை சென்றிருக்கின்றான்! 1901-ம் ஆண்டு நடந்த புரட்சிப் போராட்டத்தின் போது சிறைசென்றிருக்கின்றான்! இருந்தாலும் மக்கள் அமைதியாயிருக்கவில்லை!

"அரசாங்கத்தின் ஊழல்களை, அக்ரமத்தை மக்களுக்கு எடுத்துச் சொன்னால் அதற்கா சிறை! ஆளுவோரின் சுயநல மனப்பான்மையினால் வரும் கேடுகளைக் சொன்னால் அதற்கா சிறை! குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லி அவைகளைத் திருத்திக்கொள்ளச் சொன்னால் அதற்கா சிறை! ஒரு அறிஞரை சிறையில் போடலாமா? விட்டுவிடு

எங்கள் கார்க்கியை!......" இப்படி கூட்டம் கூட்டிப் பேசினார்கள்! பத்திரிகைகள் கார்க்கியை விடுதலை செய்யுமாறு எழுதின!

முன்பு—1901-ம் ஆண்டு புரட்சிப் போராட்டத்தின்போது—கார்க்கி சிறைசென்றபோது ரஷ்ய மக்கள் கார்க்கியை விடுதலை செய்யுமாறு கிளர்ச்சி செய்தார்கள். ஆனால் இப்பொழுது, ரஷ்யா மட்டுமல்ல உலகமே கார்க்கியை விடுதலை செய்யுமாறு கிளர்ச்சி செய்தது!

நோபல் பரிசுபெற்ற அனதோல் பிரான்ஸ் (Anatole France—Nobal Prize Winner in Literature) என்ற அறிஞர் கார்க்கியை விடுதலை செய்யுமாறு பிரான்சிலே பேசினார். சோஷியலிஸ்டு தலைவர் ஜென்ஜாரேஸ் (Socialist Leader Jean Jourer), பியரி கியூரி (Pieree—curie) போன்ற வெளிநாட்டு அறிஞர்கள் ரஷ்ய அரசாங்கத்தின் நேர்மையற்ற போக்கைக் கண்டித்து கார்க்கியை விடுதலை செய்யுமாறு பேசினார்கள், அறிக்கை விடுத்தார்கள்.

கண்டனக் குமுறல்கள் ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம்; போர்த்துகல்—இப்படிப் பலப்பல வெளி நாடுகளிலிருந்து ஜார்மன்னனிடம் குவிந்தன! அகில உலக எதிர்ப்பைக் கண்ட ஜார் அரசாங்கம் கார்க்கியை விடுதலை செய்தது.

சிறையிலிருந்து வெளிவந்ததும் "இனிமேல் ஒழுங்காக இருக்க வேண்டும். ஆட்சியைப் பற்றிக் குறை கூறினால் சிறையிலே வாட நேரிடும். ஆகவே நாமுண்டு நம் வேலையுண்டு என்று இருப்போம்" என்று நினைத்து அஞ்சி நடுங்கவில்லை கார்க்கி! "அரசியலிலே குற்றம் இருந்தால் சொல்லுவேன். அதற்கு எனக்கு உரிமை உண்டு. ரஷ்ய நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடுவதே என் லட்சியம். "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்ற கருத்து என் இதயத்தோடு கலந்து விட்டது. அப்படியிருக்க சிறைச்சாலை என்ன செய்யும்? நாட்டு மக்களின் நன்மைக்காகத் தூக்குக் கயிற்றில் தொங்கவும் தயங்கமாட்டேன்" என்று வீரம் ததும்பப் பேசினான் கார்க்கி!

ஏழை, பணக்காரர், அடிமை, ஆண்டை என்ற பாகு பாடற்ற சமுதாயத்தை அமைக்க விரும்பினான் கார்க்கி. ஆனால் அதற்கு ஜார் அரசாங்கம் ஒரு முட்டுக்கட்டை! ஆகவேதான் ஜார் அரசாங்கத்தை ஒழிக்க மக்களைத் தூண்டினான்.

கார்க்கியின் கனவு 1917–ம் ஆண்டு நினைவாகியது! ஆம், அந்த ஆண்டு நடந்த புரட்சிப் போராட்டத்தில் ஜார் ஆட்சி ஒழிக்கப்பட்டது. மன்னனின் மகுடம் மண்ணிலே புரண்டது! மக்களுக்கு மாபெரும் வெற்றி! உண்மைக்கு வெற்றி!

கார்க்கி ஒரு புரட்சி வீரன் மட்டுமல்ல, மனித சமுதாயத்துக்கு வழி காட்டிய இலக்கிய மேதையும் கூட! இலக்கிய வானில் மின்னும் தாரகை கார்க்கி! அவனுடைய நூல்கள் உலகத்து அறிஞர் பலராலும் போற்றப் படுகின்றன.

தாய்!
ஆழத்திலே தாழ்வு!
ருஷ்யப் புரட்சி சரிதம்!
சூர்ய புத்திரர்கள்!
யேகர் பலுசோவ்!

இவை, கார்க்கி, உலகுக்குத் தந்த சிந்தனைக் கருவூலங்கள்! தலை சிறந்த நூல்கள்!

இன்னும் பல அறிவு தரும், மடமை துடைக்கும் ஏடுகளைத் தீட்டி யிருக்கிறான்!

"நான் எப்படி எழுத்தாளன் ஆனேன்?" என்ற கட்டுரையில் கார்க்கி கூறுகிறான்:

"மனிதனுடைய விஷய ஞானத்துக்கு அப்பால் தனித்து நிற்கும் எண்ணம் எதுவும் கிடையாதென்பது என் கருத்து. உலகில் எல்லா விதமான பொருள்களையும் எண்ணங்களையும் ஆக்குவதும், அமைப்பதும் மனிதனே! அற்புதங்களைச் செயபவனும் அவனே! இயற்கையை அடக்கியாளும் தலைவனும் அவனே! உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் மனிதனுடைய உழைப்பாலும், திறமை—யாலும் உண்டாக்கப் பட்டவையே! நான் மனிதனையே வணங்குகிறேன்! ஏனெனில் மனிதனுடைய பகுத்தறிவாலும், சிந்தனையாலும் உண்டாக்கப் பட்டவற்றைத் தவிர வேறு எதையும் நான் இவ்வுலகில் பார்க்கவு மில்லை, உணரவு மில்லை."

மனிதன் மனிதத் தன்மையோடு சுதந்திரமாக பயனுள்ள வகையில் வாழவேண்டு மென்று ஆசைப்பட்ட கார்க்கி—மக்களின் நல்வாழ்வுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணம் செய்து க்ஷயரோகத்தைப் பெற்றுக் கொண்ட கார்க்கி—சாவின் கரத்திலே தவழும் பொழுதுகூட அன்றன்றைய அரசியல் நிலையைக் கேட்டு போசனை கூறிய கார்க்கி — எழுத்துலகச் சிற்பி கார்க்கி—இலக்கியப் பூங்காவில் டால்ஸ்டாயுடன் சமமாக உலாவிய கார்க்கி—புரட்சி வீரன் கார்க்கி—1936-ம் ஆண்டு ஜூன் மாதம் பதினெட்டாம் தேதி இயற்கை எய்தினான். என்றாலும் அந்த மாவீரன் பகுத்தறிவு உள்ளங்களில் உலவிக் கொண்டுதானிருக்கிறான். வளரட்டும் அவனது புகழ்! பரவட்டும் அவனது பொன்னான் கருத்துகள்!

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கோழைகளல்லர். சென்ற யுத்தத்தில் அவர்கள் காட்டிய வீரம் அதனை 'ருசு'ப்படுத்துகிறது. நாட்டின்பால் உள்ள காதலின் காரணமாகவும், தங்கள் அக்டோபர் புரட்சியால் கிடைத்த சுதந்திரம் எங்கே பாழ்பட்டு விடுகிறதோ என்ற அச்சத்தின் காரணமாகவும் லட்சக் கணக்கான ரஷ்யப் பெண்கள் தாங்களாகவே தங்கள் 'இரத்தக் காணிக்கை'யை இரத்த பாங்கிகளுக்களித்து பேருதவி செய்தனர்; போரில் மாண்ட வீரர்களின் நிராதரவாகப்போன குழந்தைகளைச் சுவிகாரம் எடுத்துக்கொண்டு நாட்டின் நலனைப் பாதுகாத்தனர்;

புரட்சிக்கவி பாரதிதாசன் கூறுவதுபோல 'பெண்ணடிமை தீருமட்டும் இம் மண்ணடிமை தீருவது முயற்கொம்பு'தான். அதோ சோவியத் ரஷ்யா பெண்ணடிமையை நாட்டினின்று நீக்கிவிட்டுப் பெருமையுடனும் பூரிப்புடனும் நம்மை நோக்குகிறது. நாமும் அதனைப் பார்க்கிறோம். பல்லிளிக்கிறோம்; ஆனால் பயன்?

பெண்ணடிமை ஒழிந்து, இம் மண்ணடிமை மறைந்து புதுவாழ்வு மலரவேண்டும். அதுபோது 'இந்த நாட்டுக் கெந்தநாடு ஈடு?' என்று நாம் உலகினர் முன் தலைநிமிர்ந்து கேட்கவேண்டும். காலதேவா, நீயே கூறு, அந்த நாள் எந்தநாள்?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்—அதுவும் மெய்தான் என்று தலையசைத்தோம்.

வாரீர் போராட்டத்திற்கு, வாரீர் வாரீர் என்று அழைத்தார்கள். வந்தோம் வந்தோம் என்று வெள்ளையர் எதிர்ப்பு முன்னணியில் வேகவேகமாகச் சென்று முதல் இடம் பெற்றோம்.

ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டம் முடிந்தது—1947 ஆகஸ்டு 15 வந்தது—வெள்ளையன் வெளியேறினான்—இந்தியா, இந்தியருக்கே என்ற நிலை பிறந்தது—சொந்த ஆட்சி உருவாயிற்று.

1947, 1948, 1949, 1950 என்று ஆண்டுகள் ஒவ்வொன்றாக உருண்டு கொண்டே இருந்தன.

காலம் சென்று கொண்டே இருந்தது.

வாரங்கள் மாதங்களாகி, மாதங்களும் ஆண்டுகளாகி, ஆண்டுகளும் ஒவ்வொன்றாய் அசைந்து மறைந்தது.

நாட்களும் வாரங்களும் ஆண்டுகளும் ஒவ்வொன்றாய் ஓடி மறைந்தனவே தவிர, மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு முன்னாளில் தேசபக்தர் குழுவினரால் அளிக்கப்பட்ட அந்தப் பழைய வாக்குறுதி அணுவளவும் நிறை வேற்றப் படவில்லை

வெள்ளை ஏகாதிபத்யம் நாடாண்ட காலத்தில் இருந்த அதே வேதனை மிகு நிலைமைதான், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு, வெள்ளையர் வெளியேறிய பிறகு உள்ள இந்தப் புதிய சகாப்தத்திலும் தொடர்ந்து இருந்து வரலாயிற்று.

அதே வேதனை!

அதே சஞ்சலம்!

அதே துயரம்!

அதே பளு!

மாற்றம் துளியும் இல்லை.

புது வசதி கொஞ்சமும் கிடையாது.

முன் நாளில் இல்லாத புதியநிலை, புதிய வாழ்வு, புதிய இன்பம், மூன்றாம் வகுப்பினரை எட்டியும் பார்க்கவில்லை.

விட்டோமா பார் இந்த அக்கிரமத்தை என்று அந்தக் காலத்தில் விண் அதிர முழக்கமிட்ட "வீராதி வீரர்கள்," தங்களிடமே இந்த அக்கிரமத்தை அரை நொடியில் ஒழித்துக் கட்டுவதற்கான அதிகாரம் அவ்வளவும் கிடைத்துவிட்ட இந்தக் காலத்தில் இந்தக் கொடுமையைக் குறைக்கத் தங்கள் சுட்டு விரலையும் அசைக்க மறுத்து விட்டனர்.

சுயராஜ்யம் வந்து விட்டால் அது நமக்கு சுகராஜ்யமாக இருக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்த ஏழையா உலகமும் மத்தியதர வகுப்பும் — அதாவது மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள், வந்த சுயராஜ்யம் தங்களைப் பொறுத்த வரை துயர ராஜ்யமாக இருக்கிறதே தவிர, சுகராஜ்யமாக இல்லை என்பதை அறிந்து பதைக்கலாயினர்.

இரயில்வே வருமானத்தின் பெரும் பகுதி, மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்யும் பாட்டாளிகள், மத்தியதர வகுப்பினர் ஆகிய இரு சாரால்தான் உருவாகிறது. என்றாலும் அவர்கள் நிலை, முன்னாளில் இருந்ததைவிட சிறிதளவும் உயரவில்லை. உயர்த்தப் படவில்லை ஆளவந்த அருமைத் திருமேனிகளால்!

1951ம் ஆண்டு, உலகத்தைப் பார்த்துப் புன்னகை பூத்த வண்ணம் புதுநடை போட்டு வந்த போது, இந்தியாவில், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் இருந்த நிலை, இது!

இந்த நிலையிலேதான், இரயில்வே அமைச்சர் கோபாலசாமி அய்யங்கார், அடுத்த ஆண்டுக்குரிய ரயில்வே வரவு செலவுத் திட்டத்தை நாட்டு மக்களுக்கிடையே நல்லன்புடன் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில், மூன்றாம் வகுப்பினரின் துயரம் தீர்வதற்கான வழி ஏதாவது இருக்கிறதா?

இல்லை!

துயரம் தீர்வதற்கான வழி ஏதுவும் இல்லை என்பது மட்டுமல்ல —துயரம் அதிகமாவதற்கான வழி அற்புதமாக அமைக்கப் பட்டிருக்கிறது.

அவர்களுடைய வேதனை விரிவடைவதற்கான பாதை தெளிவாக வகுக்கப்பட்டிருக்கிறது.

புதிய சுகம் எதுவும் கிடைக்கப் போவதில்லை அவர்களுக்கு. ஆனால் புதிய பளு அவர்கள் தலைமீது ஏற்றப்பட்டிருக்கிறது.

அவர்களுடைய கண்ணீர் கொஞ்சமும் துடைக்கப்படவில்லை, ஆனால் மேலும் கண்ணீர் வடித்துத் தீரவேண்டிய அளவு, சஞ்சலம் அவர்களைத் தேடிவரும்படி செய்யப்பட்டிருக்கிறது,

அவர்கள் இதுபோது சுமந்து வரும் பளுவே மிக அதிகம். அவர்களால் தாங்கமுடியாத அளவு அதிகம்.

என்றாலும் புதிய சுமை ஒன்றை இனிச் சுமக்கவேண்டும் அவர்கள்.

ஆமாம்! அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம், இப்போது இருப்பதைவிட ரூபாய்க்கு நாலணா வீதம், அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இப்போது ஒரு ரூபாய் கொடுத்து வாங்கப்படுகிற ரயில் டிக்கட், இனி ஒரு ரூபாய் மட்டும் கொடுத்தால் கிடைக்காது. மேலும் ஒரு நாலணா கொடுத்தால்தான் கிடைக்கும்.

இதே சமயத்தில் முதல் வகுப்புப் பிரயாணியின் டிக்கட்டும் உயர்த்தப்பட்டிருக்கிறது— ஆனால் உயர்த்தப்பட்டிருக்கிற அளவு என்ன தெரியுமோ? ரூபாய்க்கு இரண்டணா தான்!

டாடாவும் பிர்லாவும் டால்மியாவும் கொயங்காவும் பயணம் செய்யும் வகுப்பு, முதல் வகுப்பு. அந்த வகுப்பின் கட்டணம் ரூபாய்க்கு இரண்டணா விதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது.

கட்டைவெட்டும் கந்தனும், கைவண்டி இழுக்கும் கன்னியப்பனும், புல் சுமக்கும் பொன்னுத்தாயியும் கீரைவிற்கும் குப்பாயியும் பயணம் செய்வது மூன்றாம் வகுப்பு. அந்த வகுப்பின் கட்டணமோ ரூபாய்க்கு நாலணா விதம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

டாடாக்களிடமும் பிர்லாக்களிடமும் பணமே கிடையாதல்லவா மருந்துக்குக்கூட! ஆகவேதான் அவர்கள் இரண்டணாமட்டும் கூடுதலாகக் கொடுத்தால் போதும் என்று சொல்லிவிட்டார் கோபாலசாமியார்.

ஆனால் கைவண்டி இழுப்போர் வீட்டிலும் கட்டை பிளப்போர் குடிசையிலும், பணம், மலைபோல் குவிந்துகிடக்கிறதல்லவா? எனவேதான் அவர்கள் நாலணா கொடுத்தாக வேண்டும் கூடுதல் தொகையாக என்கிறார் அன்புருவான அமைச்சர்!

இதோ பாருங்கள் புள்ளி விவரங்களை!

முதல் வகுப்பு

இப்போதுள்ள கட்டணம்:—மை

13-ம் பக்கம் பார்க்க)

# ரஷ்ய நாட்டுப் பெண்மணிகள்
## அன்றும்—இன்றும்

[தே. பா. சம்பந்தன்.]

பஞ்சம், பட்டினி, இல்லாமை, போதாமை ஆகியவைகளை ஒழித்து 'மிட்டுப் பாருக்குள்ளே ஒரு நல்ல நாடாக' விளங்குகிறது ரஷ்யா!

'ரஷ்யாவை நோக்குகிறோம் என் செய்வோம், எங்கள் சிந்தையெல்லாம் தோள்களெலாம் நடுங்குகிறதடா' என்று பெரிய பெரிய 'வல்லரசு'களெல்லாம் வேதனைத் தீத்தில் உருகும்படியான உன்னத நிலையை எட்டிப் பிடித்துவிட்டது ரஷ்யா!!

நேற்றுவரை அது ஒரு சாதாரண நாடுதான். ஆனால் இன்று அதை ஒரு சாதாரண நாடாகத் தெளிவுள்ளோர் எவரும் மதிப்பிட முடியாது. ரஷ்யா இன்று அடைந்துள்ள இந்த உன்னத நிலை, அந்நாட்டுப் பெண்களின் இடையறாத தொண்டால்தான் என்று லெனினும், ஸ்டாலினுமே வெளியிட்டிருக்கின்றனர், "பெண்களாலாவது ஒரு நாடாவது உருவாவதாவது...உனக்கென்ன பித்தமா, அல்லது ஒருவேளை தவறாகப் புரிந்துகொண்டு பேசுகிறாயா? சொல்லுகிறவர்கள் சொன்னால் கேட்பவர்களுக்கு மதி வேண்டாமா? அப்படி நீ சொல்வது உண்மையென்றே வைத்துக்கொண்டால் அவர்கள் தெய்வீக சக்தி பெற்றவர்களாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் கேவலம், மனிதரால் ஆகக்கூடிய காரியமா அது?" என்று உங்களில் பலர் ஐயுறலாம். அது இயற்கையுங்கூட. "யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன். பெண் பிறவி பாபப் பிறவி. பெண்புத்தி பின்புத்தி, பெண்ணாய்ப் பிறந்தவள அடக்க ஒடுக்கமாக இராமல் நாலு ஆண்பிள்ளைகளுக் கெதிரில்......" என்றெல்லாம் பெண்களே பேசும் நாட்டில், "பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசே...உன் யோசனை கேட்டு அதன்படி நான் நடக்க வேண்டுமா? ஏண்டி, நீ எனக்குப் பெண்டாட்டியா அல்லது நான் உனக்குப் பெண்டாட்டியா?...இவளுக்குப் படிப்பு ஒன்றுதான் குறைச்சல்! என்னதான் படித்துப் பட்டம் பெற்றால்தான் என்ன? முடிவில் அடுப்பூதத்தானே போகிறது கள்" என்று மமதையோடும் ஏளனத்தோடும் ஆண் வர்க்கம் பேசுகிற நாட்களில்தான் நாம் வாழ்கிறோம். மறந்தவன் அல்லன் நான் அதனை!

ஆனால் சோவியத் குடியரசு அந்நாட்டுப் பெண்மணிகளால் உருவானது என்பதும் புனைந்துரையல்ல. அது போலவே அந்நாட்டுப் பெண்கள் தெய்வீக சக்தி பெற்றவர்கள் அல்லர் என்பதும் தவறானதல்ல!

சோவியத் குடியரசைத் தோற்றுவிப்பதில் தீவிரப் பங்குகொண்ட அப் பெண்மணிகள் நிலை நம் நாட்டுப் பெண்மணிகளின் நிலைக்கு எந்த விதத்திலும் மேம்பட்டதாகக் கருத இடமில்லை. இன்று நம் நாட்டில் உலவுகிறதே பெண்களைப் பற்றி 'விமர்சனம்' அது ஒரு காலத்தில் ரஷ்யாவிலும் உலவி இருக்கிறது. நம் நாட்டுப் பெண்மணிகள் இன்றும் அனுபவிக்கின்ற கொடுமைகளை அனுபவித்தறியாதவர்களல்லர் அந்நாட்டுப் பெண்கள். எத்தனைக் கெத்தனை கொடுமைகள் இழைக்கப்பட்டதோ அத்தனைக்கத்தனை விடுதலை உணர்ச்சி அவர்கள் இருதயங்களில் இரட்டிப்பாயிற்று. தீட்டத் தீட்டக் கத்தி கூர்மையாகத்தானே செய்கிறது!

ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற எண்ணம் ஒரு காலத்தில் ரஷ்யாவிலும் செலாவணியாகி இருக்கிறது. ஆண் என்ற ஆலமரத்தைத் தழுவிநிற்கும் மெல்லியகொடி பெண். பிறவியிலேயே மெல்லியல் பெற்ற அவள், ஆணுக்குப் பணி செய்து ஆண் தயவிலேயே வாழ வேண்டியவள் என்பதே நியதி என்று ஒரு காலத்தில் ரஷ்யரும் நினைத்ததுண்டு!

குடும்பம், உணவு, மாதாகோயில் என்ற ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அவள் வாழ்க்கையே அடங்கிவிடுவதாகவும் கருதப்பட்டு வந்தது! தொழிற்சாலைகளில் வேலை பார்த்த பெண்கள் அடிமைகளைப் போல நாளொன்றுக்குப் 13-15 மணி நேரம் வேலை செய்தனர். குறைந்த அளவு வேலைக்காரர்களை அமர்த்திக்கொண்டு, அவர்களிடம் சக்தியின் எல்லைக்குமேல் ஆலை முதலாளிகள் வேலை வாங்கிய காரணத்தால் நாட்டில் பலர் வேலையில்லாது திண்டாடினர். பசி, நாட்டின் சட்டதிட்டங்களை மட்டுமே சீர் குலைப்பதில்லை, ஒழுக்கத்தையுங்கூட சீர் குலைக்கும் பண்பு பெற்றது. எனவே தான் ருஷ்ய நாட்டுப் பெண்கள் விபசாரம் என்ற படுகுழியில் இடறிவிழ்ந்தனர். நாளொன்றுக்குப் 13 மணி நேரத்திற்குமேல் உழைத்த பெண்மணிகள் பெற்ற கூலி அப்படியொன்றும் 'பிரமாத'மானதல்ல, ஆண்கள் 14½ ரூபிள்கள் பெற்றனர். பெண்கள் 7½ ரூபிள்கள் பெற்றனர். ஏறத்தாழ ஆண்களின் கூலியில் பாதி பெண்களின் கூலி! வேலையில் வித்தியாசம் பாராட்டாத முதலாளிகள் கூலியில் வித்தியாசம் பாராட்டினர். எவவளவு கல்நெஞ்சு!

இலாபத்தையே 'இருதய கீத'மாகக் கொண்ட அம்முதலாளிகள் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளையே எண்ணிப் பார்க்க மனம் கூசினர். கர்ப்பிணிகளின் விடுமுறை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன; மருத்துவ உதவி மறுக்கப்பட்டது. வேலைகளை மேலும் தொடர்ந்து செய்ய இயலாது என்ற நிலையை அடைந்த 'பூர்ண' கர்ப்பிணிகளை ஆலை அரசர்கள் வேலையினின்று நீக்கினர். இந்த இடரைத் தடுக்கப் பெண் தொழிலாளர்கள் தங்கள் கர்ப்பத்தையே மறைத்து வைக்கும் 'பயங்கரப் பாதையில்' பயணம் செய்தனர். இதன் விளைவால் தொழிற்சாலையிலேயே பிறந்த குழந்தைகள் பல!

"என்ன இருந்தாலும் பெண்கள் மணமானதும் கணவன் வீடு செல்ல வேண்டியவர்கள்தானே. எனவே நாம் அவர்களுக்குக்

கொடுக்கும் உடையும், இடும் உணவும் வீண் செலவுதான்" என்று அன்றைய ரஷ்ய நாட்டுப் பெற்றோர்கள் எண்ணினர். பிறந்த இடத்தில் தான் இப்படி, புகுந்த இடத்தில் எப்படி என்றால் அவர்களுடைய கணவன்மார்கள் தங்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள வந்த துணைவியாகப் பெண்களைக் கருதாமல் தாங்கள் இடுகிற உணவிற்குப் பிரதியாக உழைத்துப் பிள்ளைகளைப் பெற்றுத்தரும் இயந்திரமாகவே மதித்து வந்தனர். அவர்களுடைய மனப்பான்மைக்கேற்ப அந்நாட்டு அந்நாள் சட்டமும் பெண்ணைப் பணி மகளாகவே சித்தரித்தது.

சொத்துரிமை, வாக்குரிமை, அரசியல், சமூகவியல் ஆகியவைகளில் தலையிடும் உரிமை ஆகியவைகளும் அவர்களுக்கு அந்நாளில் மறுக்கப்பட்டது. தான் சேர்த்த சொத்தை விற்கக்கூட அன்றைய ரஷ்ய நாட்டுப் பெண்ணுக்கு உரிமை இல்லை.

படிப்பு, பணம் படைத்தோரின் ஏகபோக உரிமையாக இருந்தது. எனவே பெரும்பாலான பெண்கள் கல்லாதவர்களாக வாழ்ந்தனர். முகத்திற்குத் திரையிடும் மௌடீகமும் ஒரு காலத்தில் அங்கு நடைமுறையில் இருந்தது. நம் நாட்டைப் போலவே பலதார மணம், பால்ய விவாகம், பொருந்தாமணம் ஆகிய கொடிய கோட்பாடுகள் அங்கே ஆதிக்கம் பெற்றிருந்தது. அதுமட்டுமில்லாமல் இளஞ்சிறுமிகள் விவாகத்திற்கு விலை கூறவும் பட்டனர்! அன்றைய ரஷ்யா பெண்களை அடிமைகளாக மதித்தது என்று கூறக்கூட இடமில்லை. ஏனென்றால் இன்னும் மட்டமாக மதித்திருக்கிறது. இல்லாவிடில் பெண்கள் தானியங்களுக்காக மாற்றிக்கொள்ளப்பட்டிருப்பார்களா? ஆனால் இந்நிலை நெடுநாள் நீடிக்கவில்லை. ஹெரசன், பெலின்சி, டோப்ரால்யுபௌ, செர்ன்ஹெவ்ஸ்கி போன்றோர் தங்கள் எழுத்து வன்மையால் பெண்களிடையே ஓர் விழிப்பை உண்டாக்கினர். பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துக் காட்டிக் காரசாரமான நடையில் கண்டனக் கணைகளை ஏவினர். இதே நேரத்தில் ரஷ்யாவில் புரட்சி மொக்குவிட்டது. தங்கள் அவல நிலையை உணர்ந்த பெண்கள் நாட்டின் விடுதலையில் தங்கள் விடுதலையில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டனர். அவர்கள், தங்கள் உடன் பிறந்தோர், தந்தை, கணவன் ஆகியோரோடு தோளோடு தோள் இணைத்து விடுதலைப் போரில் தளராது தொண்டாற்றினர்.

மார்ச் ௮உ 1913-ல் நிகழ்ந்த இன்டர்நேஷனல் பெண்கள் தின விழா அவர்களுடைய மனத்தைப் புரட்சி மனமுள்ளதாக மாற்றி அமைத்தது' போலீஸ் இடையூறுகளுக்கிடையே 1915-ல் கொண்டாடப்பெற்ற பெண்கள் தின விழாவின் வாயிலாக அவர்கள் தாங்கள் தங்கள் அடிமைத் தளைகளை உடைத்தெறிய முற்பட்டுவிட்டதாக உலகிற்குப் பிரகடனம் படுத்தினர். 1917ல் கொண்டாடப் பெற்ற விழாவில், பெண்கள், பஞ்சம், யுத்தம், ஜார் ஆகியவர்களுக்கு 'அபாய அறிவிப்பு' செய்தனர்.

அக்டோபர் புரட்சித் தீயில் பெண்களுக்கிழைக்கப்பட்ட சமூக, சட்ட அநீதிகள் அனைத்தும் சுட்டுப்பொசுக்கப்பட்டன. சோவியத் ரஷ்யா பெண்களுக்கு ஒவ்வொரு துறையிலும் சமத்துவம் வழங்கிற்று. ஸ்டாலினின் 5 ஆண்டுத் திட்டத்தின் பயனாய் நாடெங்கும் கிளம்பிய தொழிற்சாலைகளிலெல்லாம் பெண்கள் புகலாயினர். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் மறையலாயின.

தொழிற் சாலைகளில் பெண்கள் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக ஆண் பெண் என்ற ஏற்றத்தாழ்வு சிறிது சிறிதாக மங்கலாயிற்று. ஆண்களால் தான் செய்ய இயலும் என்று இதுவரை கருதப்பட்ட அனேக வேலைகளைப் பெண்கள் தங்களாலும் செய்து முடிக்க இயலும் என்பதை வெட்ட வெளிச்சமாக்கினர். சோவியத் அரசாங்கம் பெண் தொழிலாளர்களுக்கு எல்லாவித மருத்துவ உதவிகளையும், சலுகைகளையும் காட்டி அவர்கள் உற்சாகத்தைப் பன்மடங்காகிற்று. தங்களுக்களிக்கப்பட்ட தொழிற் கல்விகளை அவர்கள் சரிவரப் பயன் படுத்திக் கொண்டு தைரியமாகத் தொழிற்சாலைகளில் புகுந்து தங்கள் ஒப்பற்ற திறமையை வெளிப் படுத்தினார்கள். மிக மிக நுட்பமான இயந்திரங்களை அவர்கள் 'அனாயாச' மாகக் கையாண்டனர். சென்ற யுத்தத்தின் போது 4000–க்கு மேற்பட்ட பெண்மணிகள் எஞ்சின் டிரைவர்களாகப் பணியாற்றியிருக்கின்றனர். 1930-ல் 3600 ஆக இருந்த பெண் எஞ்சினியர்கள் தொகை 1938ல் 140,000 மாறி விட்டிருக்கிறது.

ஆண்களுக்குரிய எல்லா உரிமைகளும் பெண்களுக்கும் வழங்கப்பட்டன. கல்வி கற்க வசதி ஏற்படுத்தப் பட்டது. இதுவரை பாமரர் பட்டியலில் கிடந்த எண்ணற்றவர்கள் படித்தோர் பட்டியலில் இடம் பெற்றனர்.

கூட்டுப் பண்ணைமுறை நாட்டில் கையாளப்பட்டதன் பின் வறுமை, இல்லாமை, சுரண்டல் ஆகியவைகள் மறைந்தன. பெண்கள் பொருளாதார நிலை உயர்ந்தது.

ஜார் காலத்தில் அடிமைகள் என்று கூறத்தக்க நிலையில் இருந்த பெண்கள், புரட்சிக்குப் பின் நாட்டின் நிர்வாகத்தை நடத்திக் காட்டும் திறமை படைத்தவர்களாக, வாணிபம் செய்யக்கூடியவர்களாக, மருத்துவர்களாக, விஞ்ஞானிகளாக, கணிதமேதைகளாக மாறி விட்டனர். சந்தர்ப்பம் சாமார்த்தியத்தைப் புலப்படுத்தும் கருவி. சோவியத் ரஷ்யா பெண்களுக்குத் தங்கள் சாமார்த்தியத்தைப் புலப்படுத்தச் சந்தர்ப்பம் அளித்தது. அதன் பயன்தான் சோவியத் இன்று எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அத்துறைகள் அனைத்திலும் முன்னணியில் நிற்பது! ஒவ்வொரு துறையிலும் அந்நாட்டுப் பெண்கள் 'ஸ்டாலின் பரிசை'ப் பெற்றிருக்கிறார்கள்.

பெண்கள் திறமையிலே ரஷ்யாவுக்குக் கொஞ்சங்கூட அவநம்பிக்கை கிடையாது. இல்லாவிட்டால் பொறுப்புள்ளதும், தெளிவுமிக்கதும் அதிகம் தேவையானதுமான நீதிபதி பதவியை ரஷ்யா பெண்கள் வகிக்க அனுமதிக்குமா? தற்போது சுப்ரீம் கோர்ட்டில் 14 பெண் மணிகள் இடம்பெற்றுள்ளனர். சுப்ரீம் கோர்ட்டின் 33·9 சதவிகிதம் உறுப்பினர்களும் அவர்கள் தான்!

நாட்டு நிர்வாகத்திலும், தொழில் துறைகளிலும், விவசாயத்திலும், வேடிக்கை விளையாட்டுகளிலும், விஞ்ஞானத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் ருஷ்ய நாட்டுப் பெண்மணிகள் போருக்குப் பயந்த

(3-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு மறைந்தன. மாணப்பட்டியல் நீண்டது! ''வேக்!'' நிக்கோலஸ் தன்னையுமறியாமல் கூவினான்! அவனது நயனங்கள் நிலைகுத்தி நின்றன! நிக்கோலஸின் சிந்தனைப்புரு சிறகடித்தபடி பழங்கால நிகழ்ச்சிகளை நோக்கிப் பறந்தது.

* * *

லண்டன் பட்டணத்திலே ஒரு புராதன பாடசாலை. மணி அடிக்கவில்லை; மாணவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். இரு வகுப்புகளைப் பிரிப்பதற்காக இடையே தொங்கவிடப்பட்டிருந்த திரையில் நிக்கோலஸின் கரம் பட்டது. திரை கிழிந்தது! வகுப்பு துவங்கியது. மாணவர்கள் இருக்கையில் அமர்ந்தனர். வகுப்பில் நிசப்தம் நிலவியது. உபாத்தியாயர் நுழைந்தார். நிக்கோலஸின் நெஞ்சம் பீதியால் படபடத்தது! வழக்கத்திற்கு மாறாக வகுப்பில் அமைதி உலவுவதைக் கண்ட உபாத்தியாயரின் உள்ளத்திலே சந்தேகப்'புழு' ஊர்ந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். கிழிந்த திரை தெரிந்தது, அவரின் கிழக் கண்களுக்கு! பிரம்பிற்கு 'உணவு' கிடைத்துவிட்டது. ஆத்திரத்தோடு எழுந்தார்.

''ஆட்டுக்குட்டிகளே! இந்த அக்ரமம் புரிந்தது யார்? திரையைக் கிழித்தது எவன்? உண்மையைச் சொல்லுங்கள்'' — உபாத்தியாயர் உறுமினார்.

பதில் இல்லை.

நிக்கோலஸின் சோகம் கப்பிய விழிகள் நண்பன் வேக்கைப் பார்த்தன! வேக்கிற்கும் அதே நிலை.

''நீ கிழித்தாயா?'' — என ஒவ்வொருவரிடமும் கேட்டார் வாத்தியார். நிக்கோலஸிடமும் கேட்டார். அசட்டுத் துணிவோடு ''இல்லை'' என்றான். இறுதியாக வேக்மட்டும் பாக்கியிருந்தான்.

''வேக்! திரையைக் கிழித்தது நீதானே!''

''.........................!''

'குற்றம்புரிந்தது நீதானே!''

மீண்டும் மௌனம்.

''கையை நீட்டு...கழுதை!'' — குரு கர்ஜித்தார்.

பிரம்பின் பேயாட்டம் முடிந்தது. வேக்கின் கரம் சிவந்தது. வெறுப்பு ததும்பும் மாணவர்களின் கண்கள் நிக்கோலஸை வெறித்து நோக்கின. அவனது உள்ளமோ தூண்டிற்புழுவினைப் போலத் துடித்தது! குற்றம் செய்தவன் நிக்கோலஸ்! கொடுமைக்காளானவன் வேக்.

''அன்பா! தவறு செய்தவன் நானிருக்க தண்டனை உனக்கா? மற்றப் பிள்ளைகளைப்போல நீயும் மறுத்திருக்கலாமே!'' — நிக்கோலஸின் குரலிலே பரிவு கலந்திருந்தது.

''வாத்தியார் உன்னிடம் கேட்டார், நீ குற்றத்தை ஏற்கவில்லை! கடைசியாக நானும் மறுத்து, உண்மை வெளிப்பட்டால்......! 'தவறு செய்தது'—'பொய் பேசியது'—இரு குற்றங்கள் உன்மேல் சுமத்தப்பட்டிருக்கும். ஆகவே நான் குற்றத்தை ஒப்புக்கொண்டேன். நீ என் நேசனல்லவா?''

''நண்பா! உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்!'' —நிக்கோலஸின் தொண்டை அடைத்துக்கொண்டது. ஆம், அவனுக்கு அன்புப் பெருக்கு!... அழுதேவிட்டான்!...

காலவெள்ளம் கரைபுரண்டோடியது! எத்தனை மாற்றங்கள்...வேற்றுமைகள்! வேக் போர்க்களப் பயிற்சி பெற்று சார்லஸின் சேனைத் தலைவனானான். நிக்கோலஸ் மக்கள் தொண்டனாக மாறி கிராம்வெல்லின் குடி ஆட்சியில் நீதிபதியானான்.

நிக்கோலஸ் நீதிபதி! — குற்றவாளி, வேக் — கேண்மையாளன் வேக்! சிக்கலான நிலை! பால்யகால பாசப்பிணைப்பு நிக்கோலஸை நிலைகுலையச் செய்தது...வேதனையில் வடித்தெடுத்த பெருமூச்சு அவனது நெஞ்சாழத்தினின்று நெளிந்தபடி வெளிவந்தது!

* * *

விசாரணை மண்டபம்! குற்றவாளிகள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர்! அந்தக் கூட்டத்திலும் வேக்கைக் கண்டுகொண்டான், நிக்கோல்ஸ்! அவனது கரங்கள் சில்லிட்டன! சிந்தனை குழம்பியது! நேரமோ நீண்டது! தீர்ப்பு...தெரிவிக்கப்பட்டது! அனைவருக்கும் மரண தண்டனை! குற்றவாளிகளின் முகங்களிலே சவக்களை மின்னலிட்டது! ''கடமை உணர்ச்சிக்கு என் நண்பனைக் காவுகொடுப்பதா?—நிக்கோலஸ் முணுமுணுத்தான்! இல்லை, அலறினான்!

## 2

''ஒரு பெண் வந்திருக்கிறாள், தங்களைப் பார்க்க!'' — சிப்பந்தியின் குரல் கேட்டு நிமிர்ந்தான்.

''அழைத்துவா.'' — வேலைக்காரன் விரைந்தான்.

ஒரு பெண்ணும், சிறு பசலையும் வந்தனர். சோகத்தின் சிகரமாக, துன்பத்தின் பிம்பமாக அவள் காட்சியளித்தாள்.

''யார் நீங்கள்? என்ன வேண்டும்?''

''நான்...வேக்கின் துணைவி...... இது என்செல்வம்.........''அடக்க முடியாத துயரம் அவளது குரலை அணைபோட்டுத் தடுத்தது!

''என் நண்பனின் மனைவியா? வாருங்கள். இப்படி உட்காருங்கள்.''

சோக இருளிலும் ஒரு மகிழ்ச்சி மின்னல் தோன்றி மறைந்தது. வந்தவள் திகைத்துவிட்டாள்.

''என் கணவனை மன்னிப்பீர்களா?!''—அவள் கேட்டாள் ஆர்வத்தோடு.

நிக்கோலஸ் உதட்டைப் பிதுக்கினான்......''மன்னிக்கும் அதிகாரம் எனக்கில்லை. அந்தப் பொறுப்பு தலைவர் கிராம்வெல்லினுடையது. அவர் இப்போது வெளியூரிலல்லவா, இருக்கிறார்! சந்தர்ப்பம்கூட நம்மை சதி செய்கிறதே!'' சோகமான பதில்.

''என் வாழ்க்கை விளக்கு அணையவேண்டியதுதானா? ஆசைக் கணவர்......அன்புக் குழந்தை...'' —மங்கை குமுறினாள்...நிக்கோலஸ் சிந்தனையிழந்தான். அவன் முகத்திலே களிப்பின் ரேகைகள் படர்ந்தன!

''கணவன் இறந்த மறு கணமே, வேற்று வாலிபர்களுடன் கைகோத்துக் கூத்தாடும் 'விஷ' வனிதைகள் நிறைந்த இந்த நாட்டில்...உங்களைப் போன்ற உத்தமிகளும் வாழ்கிறார்கள். நீங்கள் மணிமுடியிலே ஒளி வீசவேண்டிய மாணிக்கம். காலப்புயலால் மண்ணிலே கிடக்கிறீர்கள்...நாளை மறுநாள் காலையில்தான் வேக்கின் தண்டனை நிறைவேற்றப்படும். நான் இப்போதே செல்கிறேன், கிராம்வெல்லைக் காண. கர்த்தரின் கருணை பொழியட்டும்! உங்கள் கணவர் காப்பாற்றப்படுவார்'' — நிக்கோலஸ் மூச்சுவிடாமல் பேசி முடித்தான். அவன் கண்களிலே

(13-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 மாசி 19 3—3—51 சனிக்கிழமை | வீச்சு 26 |
|---|---|---|


## தேசம் போற போக்கைப் பாத்தா.........!

★

### பேசக்கூட நல்லால்லே!

★

"கூடாது இந்தக் கொடுமை!"

"ஆகாது இந்த அக்கிரமம்!"

"விட்டு வைக்கக் கூடாது இந்த விபரீதப் போக்கை!"

"மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் என்றால் மூட்டைப் பூச்சிகள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்—என்ன மமதை!"

"மமதைமட்டுமா, மகாமட்டரகமான போக்கு அல்லவா இது? மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் மீது இப்படியா பளுவைச் சுமத்துவது! தாங்கமுடியுமா அவர்களால்?"

"சிட்டுக் குருவிமீது பீரங்கிப் பிரயோகம் செய்வது போன்ற செயல். இது! தகாது இந்தத் தவறான செயல்!",

"மூன்றாம் வகுப்பு பிரயாணிகள் என்றால் ஏழை எளியவர்கள் என்று பொருள்; பரிதாபத்திற்குரிய பாட்டாளிகள் என்று பொருள்; மாடாக உழைத்து எலும்புக் கூடாகத் தேய்ந்து போகும் உழவர் குலத்தவர்கள் என்று பொருள். வாழ வழியறியாது அலையும் மத்தியதர வகுப்பினர் என்று பொருள். அவர்களுடைய பிரயாணக் கட்டணத்தையா இப்படி நாளுக்குநாள் உயர்த்திக் கொண்டே போவது? இந்த ஆட்சியாளர்களுக்கென்ன ஈவு இரக்கம் என்பதே கிடையாதா—ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்?"

"ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பிறகு எண்ணிப் பார்த்து முடிவு செய்து கொள்வோம். இவர்கள் இப்படி நடந்து கொள்வதை இன்னமும் எத்தனை நாட்களுக்கு நாம் அனுமதித்துக் கொண்டிருப்பது-அதைத்தான் இப்போது நாம் முடிவு செய்தாகவேண்டும்."

"முடிவு செய்வதென்ன? ஆளவந்தார்களின் இந்த ஆகாவழிப் போக்கை எதிர்த்து நாம் புரட்சிக் கொடியை உயர்த்தி உடனடியாகப் போர் தொடுத்தாக வேண்டும்."

"போரா?"

"ஆமாம்! போர்! அறப்போர்! மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளை ஆட்சியாளர்கள் புழுப் போலத் துடிக்க வைக்கும் இன்றைய பொல்லாங்கான நிலைமைகளைப் பொடிப் பொடியாக்கு வதற்காக ஓர் போர்! சிறந்த போர்! சீரிய போர்!"

நெடுங்காலம் ஆகிவிடவில்லை—ஆண்டுகள் பல நூறு ஓடி மறைந்துவிடவில்லை—அந்தப் பழைய நிகழ்ச்சிகள் நம மனக் கண்ணை விட்டு அகன்று அழிந்துவிடவுமில்லை—நமக்கு நன்றாக நினைவிருக்கிறது—நமக்கு மட்டுமா? நாட்டு மக்கள் அத்தனை பேருக்குமே நினைவிருக்கிறது—இந்தப் பரந்த இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெறுவதற்கு முன்னாள் வரையிலே, அன்னை பாரத தேவியின் அருமந்த புத்திரர்கள் மேலே பொறிக்கப்பட்டுள்ள விதமாகவெல்லாம் தீப்பொறி பறக்கப் பேசி, அன்றைய ஆளவந்தார்களை ஏசி, நாட்டு மக்களைப் படை திரட்டிய காட்சி!

சந்து முனைகளிலே, காவடித் திண்ணைகளிலே, சாலை ஓரங்களிலே, மார்க்கெட் பக்கங்களிலே பொதுக் கூட்ட மேடைகளிலே, நாலாறுபேர் கூடிப் பேசும் ஏனைய இடங்களிலே, எங்கு பார்த்தாலும் தேசியத் திருவாளர்கள், அந்தக் காலத்தில் இப்படித்தான் பேசிக் கொண்டிருந்தனர்.

"மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளை எட்டி உதைக்கிறார்கள்! முதல் வகுப்புப் பிரயாணிகளை முத்தம் கொடுக்கிறார்கள்! என்ன ஓரவஞ்சனை?" என்று உவமான உவமேயப் பொருத்தத்தோடுகூட விரிவுரை ஆற்றியிருக்கிறார்கள்-மறந்துவிடவில்லை நாம் அந்த வாசகங்களை

"மின்சார விசிறி முதல் வகுப்புப் பிரயாணிக்கு! வெல்வெட் நாற்காலி, முதல் வகுப்புப் பிரயாணிக்கு! படுக்கவும் தூங்கவும் வசதி முதல் வகுப்புப் பிரயாணிக்கு! இன்பமயமான பயணம் முதல் வகுப்புப் பிரயாணிக்கு! ஆனால் மூன்றாம் வகுப்புப் பிரயாணிக்கோ? நிற்கவும் முடியாது நெருக்கடியான நிலையில் நூற்றுக் கணக்கான மைல்கள் ரயிலில் பயணம் செய்தாக வேண்டிய நிர்ப்பந்தம்! தகுமா இது?"—கேட்டார்கள் தேசியவாதிகள் இது போல அந்தக் காலத்தில்! அந்தச் சொற்களும் சொற்றொடர்களும் இன்னமும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

வெள்ளையன் நாடாள்கிறான், ஆகவேதான் இந்தக் கொடுமை இருக்கிறது என்று பேசினார்கள் அப் பெருந்தன்மையாளர்கள்—ஆமாம் என்றோம்.

அவனுடைய ஆதிக்கம் நாட்டை விட்டு அகன்றுவிட்டால், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகட்கு மட்டற்ற வசதிகள் செய்ய முடியும் என்று சொன்னார்கள்—சரி என்று ஒப்புக் கொண்டோம்.

ஆகவே நம் அனைவருடைய முழு முயற்சியும் வெள்ளையர் ஆதிக்கத்தை விரட்டியடிப்பதிலே தான் செலவிடப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறினார்

(4-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை

# அவன் குடியன்!

[கே. ஏ. வகாப்]

அந்த நேரத்தில் அந்தப் பூட்டு பூட்டப் பட்டிருந்ததை அவன் எந்த நாளிலுமே கண்டது கிடையாது. ஆனால் இந்த நான்கைந்து நாட்களாகத்தான் பூட்டப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் சந்தடியுடனிருக்கும் அவ்விடத்தில் பெரும் அமைதி நிலவிற்று. தன் சோகம் நிறைந்த கண்களாலே ஒருமுறை அந்தப் பூட்டை உற்றுப் பார்த்தான். மஞ்சள் வெயிலில் அவன் கருத்த—வியர்வை நிறைந்த முகம் பளபளத்தது. ஆதவன் ஆழியோடு செய்த போரோ என்னவோ! மேற்கே இரத்த அருவிகள் ஓடின. அதைக் கண்டு வர்ணமுகில்கள் சிரித்துக் கொண்டிருந்தன. வெற்றி தனக்கே என்று ஆதவன் ஆழியில் மறைந்துகொண்டிருந்தான். மெதுவாக நடந்தான். அவன் நடை தளர்ந்திருந்தது. சிறிது தூரம் சென்றதும் அந்தப் புளிய மரத்தடியில் நின்று, மறுபடியும் அந்தக் கடையை—பூட்டை திரும்பிப் பார்த்தான்.

* * *

அந்தக் கடையில் அந்தப் பூட்டு பூட்டப்பட்டு ஐந்து நாட்களதான் ஆயிற்று அன்று மாலை அந்தக் கடை முன்னால் பல தலைவர்கள் வந்து கள்குடிப்பதால் வரும் கேடுகளை விளக்கி கள்ளரக்கனுக்குத் தீ மூட்டினர். (கள்ளரக்கன் என்ற வைக்கோல் பொம்மைக்குத்தான்.) குடியர்களுக்கெல்லாம் பானகம் கூட கொடுத்தனர்.

வேலையிலிருந்து வீடு திரும்பிய முருகன் வழக்கம்போல் அந்தக் கள்ளுக்கடைக்கு வந்தான். அங்குக் கூடி இருந்த கூட்டத்தைக் கண்டு பெரிய மனிதர்களெல்லாம் கூட கள் குடிக்க வந்து விட்டார்கள் போலிருக்கிறது என்று எண்ணினான் முதலில். அருகே வந்து பார்த்தான். அங்கிருந்தவர்களெல்லாம் கள்ளுக்குப்பதிலாகப் பானகம் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து "விஷயம் என்ன!" வென்றுவிசாரித்தான். "இனிமே கள்ளு விக்கமாட்டாங்களாம்" என்று ஒருவன் சொன்னதைக் கேட்ட அவன், காபி குடிக்காத 'ஆபீசர்' போல் மனங்கலங்கினான்.

பானகம் சுவையற்றது என்று எண்ணினானோ என்னவோ! அவர்கள் கொடுத்ததை வாங்கி அங்கேயே வைத்துவிட்டு பேசாமல் திரும்பினான். யார்யாரோ ஏதேதோ சொன்னார்கள். ஆனாலும் அவன் அதைக் குடிக்காமலே போய்விட்டான். மரத்தடியில் கூட்டம் கூடி இருந்தது. என்னவென்று போய்ப் பார்த்தான். அப்படியே திகைத்து நின்று விட்டான். ஏனென்றால் அவ்வூர் பெரிய வீட்டுக்காரர் அந்தக் கூட்டத்திற்கு தலைமைவகித்து, "குடிக்க வேண்டாம். அதனால் பல துன்பங்கள வரும்," என்று பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். ஒரு நாளைக்கு இரண்டு பாட்டில் மூன்று பாட்டில் குடிக்கும் பெரிய வீட்டுக்காரரே அப்படிப் பேசியதைக்கண்டு அவன் திகைக்காமல் வேறென்ன செய்ய முடியும்! சிறிது நேரம் நின்றிருந்தான். உடனே திரும்பிவிட்டான். ஏதோ சிந்தித்துக் கொண்டே சென்றான் முருகன். "பெரிய வூட்டுக்காரே குடிக்காத இருந்தா.........நம்மாலே தானா இருக்க முடியாது" என்று எண்ணினான்போல் இருக்கிறது. அன்றைய வருமானம் அப்படியே வந்ததில் அவன் மனைவி செல்லிக்குக்கூட சந்தோஷம் தான்.

* * *

ஆனால் இன்று.......வீட்டையடைந்ததும் ஒரு ரூபாய் நோட்டை எடுத்து அவள் முன்னே வீசி எறிந்துவிட்டு திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவளைப் பார்ப்பதற்குப் பைத்தியக்காரன் போல் தோன்றினான்.

அவன் மனைவி செல்லிக்கு இந்த நான்கைந்து நாட்களாக அவன் போக்கு—நடத்தை ஆச்சரியமாகவே இருந்தது. புன்னகை தவழும் அவன் இதழ்கள் பொலிவிழந்திருந்தன. கண்களில் ஒளியே இல்லை. அவன் உடல் துவண்டிருந்தது. வாயிற்கதவைப் பிடித்தவாறே முருகனையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள் செல்லி.

குடியானைக் கட்டிக் கொண்டோமானால் உதைதான்கிடைக்குமென்றெண்ணினாள்—அன்று செல்வி. ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. அவளுக்கு யாதொரு துன்பமும் கொடுக்காமல் அன்பாகவே நடந்து கொண்டான். ஏசிடுவான்என்று தான் எண்ணினாள். பதிலாக ஆசைவார்த்தைகள் தான் பேசினான். அன்றாடம் வேலை செய்து கூலி சம்பாதிப்பவன் தான் முருகன். தினம் தினம் அவன் கட்டும் கள்ளுக்கடை 'லீஸ்' பணம் போக மீதி செல்வியிடம்தான் சேரும். அவன் குடிப்பதற்கு மாறாக செல்வியொன்றுமே சொல்லுவது கிடையாது. அவன் குடித்தால் குடியன்போல ஆர்ப்பாட்டமோ அல்லது அமளியோ செய்யமாட்டான் அமைதியாகவே இருப்பான். குடிப்பது அவன் ஆதிநாள் பழக்கம் ஆதலால் அவனை அது ஒன்றும் அலட்டுவது கிடையாது. செல்வியும் முருகனிடம் செல்லமாகவே நடந்து கொள்ளுவாள். நான்கைந்து நாட்களாகத் தன் கணவன் உள்ள நிலையைக் கண்டு செல்வி கலங்கினாள். "இந்தக் கள்ளுக்கடை இருந்தாலென்னவாம் ஏன் எடுத்துத் தொலைத்தார்கள்" என்று தன் கணவன் மேலிருந்த அன்பால் அரசாங்கத்தையும் கடிந்தாள்.

கள்ளை விட்டிருக்கும் கணவனுக்குக் கறியும் சோறும்தான் சமைத்துப்போட்டாள். அதைக்கூட அவன் வயிறார சாப்பிடுவது கிடையாது. கள்ளுக்கடைகூட இல்லை ஆனால் அவன் வருமானம் மட்டும் நாளுக்கு நாள் படிப்படியாக குறைந்து கொண்டேவந்தது. ஆனால் செல்வி இதைப்பற்றி முருகனிடம் ஒன்றும் கேட்கவில்லை. அவளுக்கே விஷயம் ஒருமாதிரியாக விளங்கியது. "செல்வி! கள்ளு குடிச்சா மலையகூட தூக்கிடலாம் போல இருக்கு! அது ஒரு நாளக்கி இல்லாட்டி நடக்கக்கூட முடியல........ஒங்கிட்ட இருந்து ஒரு நாளிக்கி முத்தம் வாங்கலண்ணாக்கூட அவ்வளவு கஷ்டம் தெரியில! ஆனா அந்த கள்ளு குடிக்காப் பூட்டா......." என்று முருகன் அவளிடம் பல முறை சொல்லி இருப்பது அவள் நினைவிற்கு வந்தது. உழைப்புக்கேற்றஊதியம்தானே கிடைக்கும்! உணவுகூட சரியாக உண்ணாத அவன் எப்படி உழைக்கப் போகின்றான்?

"சோறு போட்டு வச்சிருக்குது அத்தான்..........." என்ற செல்வியின் குரல் கேட்டு முருகன் மெதுவாக உள்ளே எழுந்து சென்றான்.

* * *

"...லொக்....லொக்... லொக்....லொக்க்க்.."

"என்ன முருவண்ணா என்னா ஒடம்புக்கு?" என்று கேட்டுக்கொண்டே வந்தான் காத்தான்.

"உம்.......ஒண்ணுமில்ல...... லொக்...இருமல்....லொக்...."

"வேள நாழி இல்லாத எப்பவும் அந்த பீடியே புடிச்சிகிட்டு இருந்தா இருமல்வராத என்ன செய்யும்." என்று அலுத்தாள் செல்வி.

"பின்ன என்ன பண்ரது காத்தான்! நீயேசொல்லு...லொக்... பளய பளக்கம்போனா சும்ம இருக்க முடியுதா......புதுசா ஏதாச்சம் ஒண்ணு ஆரம்பிச்சுடுது.....லொக்..." என்றான் முருகன்.

"ஓ......அதானா என்னடா ஆளே எளச்சிப் போயிட்டாரேண்ணு பாத்தேன்..." என்று காத்தான் சொல்லி நிறுத்திமறுபடியும் மிகத்தாழ்ந்த குரலில் அவனுடன் பேசலானான்.

"முருகண்ணே ஒனக்கு விஷயம் தெரியுமா......அண்ணிக்கி இங்கே கள்ளுக்கட மூட்னங்க இல்ல...அப்பவே நம்ம மருதகளத்து குடிசையிலே....கட தொரந்தாச்சி...இப்ப எல்லா அங்கதான்.....குடிக்கிறது, தெரியவே தெரியாதா? அதான் என்னடாண்ணு பாத்தேன்.... ரொம்ப நாளா ஆளேயகாணோமே, பாத்துட்டு வரலாம்ணு இப்படி வந்தேன்." என்றான் காத்தான். "என்ன மெய்யாவா? மருதகளத்து குடிசிலயா வெச்சி விக்கிறான்.. நாங்கூட அந்தப் பக்கம் வந்தனே......விசயம் தெரியாதே! அந்த மருத சொன்னானை பாத்தியா? களவாணிப்பய...... உம் அதுசரி இதுபோலண்ணா போலிசுல தெரிஞ்சா புடிச்சிக்க மாட்டாங்க?" என்றான் முருகன்.

—"அதுக்காகத்தான் இவ்வளவு ரகசியமா வேலநடக்குது.... இண்ணிக்கிப் பாத்தியா....நம்ம கன்னியப்பன் இல்ல....சோடா வாங்கிட்டுப்போறான் பெரியவூட்டுக்கு. எனக்கு சந்தேகந்தான் ...மெதுவாகவிசயத்தைவிசாரிச்சேன். பெரிய வூட்டு ஐயாவுக்கு (அன்று கூட்டத்திலே தலைமை வகித்துப் பேசிய பெரிய மனிதர்) ஒரு வாரத்துக்கு முன்னே புச்சேரிலே இருந்து ரவுசியமா பத்து பிராந்தி பாட்டலு வந்துதாம். கன்னியப்பன்தான் அடிக்கடிபோயி வாங்கிகிட்டு வருவானும். பிராந்திகூட கலந்து குடிக்க சோடாவாம்.....அவுங்கள்ளாம் குடிக்கச்சே நமக்கென்னண்ணே? சரி நான் போயிட்டு வர்ரேன்! சாயரச்சே அப்படிவா.' என்று சொல்லி காத்தான் எழுந்து போய்விட்டான்.

காத்தான் வந்துபோனதிலிருந்து முருகன் மிக்ககளிப்புடன் காணப்பட்டான். மாலைவேளையும் நெருங்கியது. சந்தோஷத்தோடு துண்டை உதறிமேலே போட்டுக்கொண்டு செல்வியிடம் சொல்லிவிட்டு மருதையின் களத்துக் குடிசையை

நோக்கி நடையைவிடலானான். செல்வியும் புன்னகை தவழ அவனையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். இத்தனைநாள் ஒளிந்துகிடந்த அவன் முகஒளியை-புன்னகையை - இன்றுதான் கண்ட செல்வி புன்னகை செய்யாமல் வேறுஎன்ன செய்வாள்?

"அடடா. இவ்வளவு நாள் விஷயம் தெரியாமல் வீணாஉடல கெடுத்துக்கிட்டோமே' என்று தன்னைத்தானே கடிந்துகொண்டு முருகன் நடந்து சென்றான். ஒரு இன்ப உணர்ச்சி அவன் உடல் முழுவதும் பரவியது. காலடிசப்தம் கேட்டு எதிரே நிமிர்ந்து பார்த்தான் முருகன். ஐந்து சிகப்புத் தொப்பிகள், அவர்கள் மத்தியிலே விலங்கு பூட்டிய மருதை, அவன் பின்னாலே இரண்டு மூன்று பானைகள், இன்னும் சில சாமான்களும் தூக்கிக்கொண்டு வந்ததைப் பார்த்து அப்படியே திகைத்து நின்றுவிட்டான். பானையில் அலம்பும் சாராய வாசனை லேசாக அவன் நாசிகளிலே நுழைந்தது. அந்த சிப்பாய்கள் முருகனை ஒருமாதிரியாக பார்த்துக்கொண்டே சென்றனர். விஷயம் என்னவென்று விசாரித்தான். நல்லமனிதர்—பெரியமனிதர் என்று பட்டம் பெறுவதற்காக — மருதைமேல் உள்ள மகிழ்ச்சியால் பெரிய வீட்டுக்காரர் செய்த கைங்கரியம் என்று அறிந்தான்.

"பெரிய வீட்டுக்காரர் மட்டும் குடிக்கிறாரே அவர யாரும் கேக்கமாட்டாங்களா? ஒருவேள அவுங்கள் மட்டும் குடிக்களாம்போல இருக்குது....ஏன் அவரு குடிச்சா நம்மளும் குடிக்கிறது அவுருமட்டும் குடிக்கலாமா?" என்று ஏதேதோ எண்ணினான் அவன். குடியென்றால் எல்லாம் குடியாகிவிடுமா பெரிய வீட்டுக்காரர் அருந்துவது 'குடி'யல்லவே'? அவர் உடலுக்கு வலிவுதரும் பொருள்களாகிய பீர், பிராந்தி, விஸ்கி போன்ற பானவகைகளல்லவா அருந்துவது. பெயர்களே எவ்வளவு அழகா இருக்கிறது அது தெரிகிறதா அந்தமடையனுக்கு? அவர்களும் 'குடி'யர்கள்தான் என்று முடிவுகட்டிவிட்டான் பாவம் தெரியாமல்! பெரியமனிதர்கள் குடித்தால் யார் கேட்கப் போகிறார்கள்! சர்க்காரா? அதுதான் அவர்களுடையதாயிற்றே!

ஏதோ சிறிது நேரம் யோசனை செய்தான் முருகன். பிறகு நேரே காத்தானிடம் சென்றான். "ஏ............காத்தான்...நாளக்காலம்பர புதுச்சேரிக்குப் போவலாம் வரியா? என்ன சொலற....நீ வந்தாலுஞ் சரி வராவிட்டாலுஞ்சரி நான் போவப்போறேன்.....எனக்கு அது இல்லாம பயித்தியம்புடிச்சிடும்போல இருக்கு...!" சிறிது நேரம் யோசித்து "சரி பாக்கலாம் ராவிக்கி ரோசன பண்ணி சொல்றேன்"...என்றான்.

செல்வியின் கழுத்தில் அவன் செய்துபோட்ட தங்கத்தாலி சாடு...அது. அதை மெதுவாக அவளிடமேகேட்டு......வாங்கிக்கொண்டு காத்தானுடன் புதுச்சேரிக்குத் தயாரானான். கணவன் சந்தோஷத்திற்காகசெல்வி யாதொரு மறுப்புமின்றியே கேட்டவுடனே கழற்றிக் கொடுத்துவிட்டாள்

புதுச்சேரியடைந்து ஒரு பெரிய கடையாகப் பார்த்து இருவரும் புகுந்தனர். பாட்டல் ஒன்று, இரண்டு, மூன்று என்ற கணக்கிலே உருண்டுகொண்டே இருந்தது. இருவரும் குடித்துக்கொண்டே இருந்தனர். காத்தான் பொருளாதாரநிலையைமுன்னிட்டும் இதற்கு முன்னாட்களில் அவன் குடித்திருப்பதாலும் அளவோடு நிறுத்திக்கொண்டான். முருகன் மட்டும் குடித்துக்கொண்டே இருந்தான். அவன் கண்கள் அழல்போல் சிவந்தன. மெதுவாக தள்ளாடி எழுந்தான். மயக்கமே கண்டறியாத அவனுக்குத் தலைசுற்றியது. ஒரு மாதத்திற்கு மேலாக குடிக்காமலிருந்த ஆவலாலும் இனிமேல் எப்பொழுது குடிக்கப் போகின்றோம் என்ற எண்ணத்தாலும் அன்று மிக அதிகமாகவே முருகன் குடித்துவிட்டான். ஆதலால் அவனை அண்டாத மயக்கம் அன்று அண்டிவிட்டது. தள்ளாடியவாறே தாலிச்சரடு விற்ற ரூபாயை கடைக்காரனிடம் கொடுத்த மீதியைப் பெற்றுக்கொண்டு நடக்கத் தொடங்கினர். காத்தான் முருகனை கைத்தாங்கலோடே 'ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்றான்' 'டிக்கட்'டு வாங்கிப்பயணத்திற்கு தயாராயினர்.

'கூ........'வென்று ரயில் கூவி மெதுவாகநகரத்தொடங்கியது. ஆனால் காத்தானுக்கும் முருகனுக்கும் ஏறுவதற்குத்தான் இடங்கிடைக்கவில்லை. "ஐயா... ஐயா....கொஞ்சம் எடம்வுடுங்கோ" என்று கெஞ்சிக் கொண்டே நகரும் ரயிலுடன் முருகனையும் இழுத்துக் கொண்டு ஓடினான். 'சனியன் தொலை' என்று சொல்லி அவர் உள்ளே சென்று படியை காலியாக்கினர். இருவரும்கம்பியைப் பிடித்துக்கொண்டு படிமேல் நின்றுகொண்டனர்.

ரயில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. காத்தானுக்கு உட்காருவதற்கு கொஞ்சம் இடம் கிடைத்தது. மெதுவாக படியின் மேல்புறத்தில் உட்கார்ந்துகொண்டு முருகனையும் தன் ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். முருகனுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை. அரைதூக்கத்துடன் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தான். திடீரென்று

பெரும் சப்தம் கிளம்பியது "தடால்...தடீல்" ஆற்றின் அணைமேல் சென்றது ரயில். எதிர்பாராத விதமாக இந்த சப்தம் மயக்கத்திலிருந்த முருகனைத் தூக்கிவாரிப்போட்டது. காத்தான் இழுத்துத்தான்பிடித்தான் ஆனால் பிடி நழுவியது.... ஐயோ என றலறினான்....அபாய அறிவிப்புச்சங்கிலி இழுக்கப்பட்டது...ரயில் நின்றது,

நான்கைந்துபேராக அணைக்கடியில் மண்டை பிளந்துகிடந்த மாஜி முருகனை தூக்கிக்கொண்டு வந்தனர். மறுபடியும் ரயில் அவனை சுமந்துகொண்டு அதே சப்தத்துடன் ஓடத்தொடங்கியது. பிணத்தினருகே காத்தான் கண்ணீர்விட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மாசற்ற நீலவானம். அதன் மத்தியிலே தண்மதி. எங்கோ இருந்துவரும வெண்முகில்கள் அதை அடிக்கடி முத்தமிட்டுச் சென்றன. சிறிதுநேரம் நிலா தெரியும். பின் லேசாகமுகிலால் மூடப்படும். இதையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள் செல்வி. தன் கணவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் திடீரென்று வானம் இருண்டது என்னென்றுபார்த்தாள் மதியைக் கவ்விக்கொண்டிருந்தது ஒரு கருமுகில். பின்பு மதிதெரியவே இல்லை. அது அகலும் அகலும் என எதிர்நோக்கி மனம் அலுத்தாள். பெரும் பெரும் கருமேகங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நீலவான ஒளியை மறைத்தனவே யன்றி அகலவே இல்லை. மறுபடியும் அந்நிலவை அவன் காணவே இல்லை! ஏன் அதைக்காணமல் அவள் வருந்த வேண்டும்? அவள் வாழ்விற்கும் அந்த நிலவிற்கும் என்ன சமபந்தம்?

---


# வகுப்புரிமைப் போராட்டம்

## கம்யூனல் ஜி. ஓ. பற்றிய விளக்க நூல்

ஆசிரியர்: க. அன்பழகன் எம்.ஏ.,

★

* கம்யூனல் ஜி. ஓ. என்ற வகுப்பு நீதிச் சட்டம் தோன்றிய காரணமும், வளர்ந்த வகையும்.
* அதனால் திராவிட மக்கள் பெற்ற நன்மைகளும், வசதிகளும.
* அதைக்கண்டு ஆதிக்க வெறியர் அடைந்த ஆத்திரமும், சதிச் செயல்களும், தொடுத்த போராட்டங்களும்.
* அந்தப் போராட்டங்களால் திராவிட இனத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், ஒற்றுமைப் பண்பும்,
* திராவிட இயக்கத் தோற்ற முதல் முரசும், பார்ப்பனரல்லாத மக்களின் போராதரவும்,
* டாக்டர் C. நடேசன், சர். தியாகராயர், டாக்டர் T. M. நாயர் வ. வு. சிதம்பரனார், பெரியார் ஈ. வெ. ரா, S. முத்தையா, அறிஞர் அண்ணா ஆகியோர் வகுப்பு நீதியை நிலைநாட்டப்போராடிய தன்மையும், அதன் விளைவுகளும்,
* தேசிய காங்கிரஸ், தேசிய பத்திரிகைகள் இவற்றின் போர்வையில் நடைபெற்ற பிராம்மணீயப் பித்தலாட்டங்கள்,
* கம்யூனல் ஜீ. ஓ. வும் கருப்புக்கண்ணாடியும், கம்யூனல் ஜி. ஓ. வும் பிரகாசமும், கம்யூனல் ஜி. ஓ. வும், இதர பார்ப்பனரும், கம்யூனல் ஜி. ஓ, வும் காந்தியாரும், கம்யூனல் ஜீ. ஓ.வும் ஓமந்தூராரும், கம்யூனல் ஜி. ஓ.வும் தற்கால மந்திரி சபையும் பற்றிய விளக்கம்,
* தகுதி—திறமைகளின் தகிடுதத்தம்,
* நீதிமன்றத் தீர்ப்பும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும்,
* இந்திய அரசியல் சட்டத்தின் அணைப்பிலே அல்லாடியாரும் அவர்தம் இனமும்,
* தகுதி—திறமையில் பார்ப்பனரல்லாத அறிஞர்கள் ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் காட்சி,
* திராவிட இலட்சியப்பண் வளர்ந்த விதம்,
* மறுக்க முடியாத பலப்பல சான்றுகள்,
* ஏராளமான வகுப்புநீதி பற்றிய புள்ளி விவரங்கள்,

**இத்தனையும் விளக்கும் எழில்மிகு ஏடு.**

மாணவர், ஆசிரியர், தொழிலாளர், அரசியல் பணியாளர், பொதுமக்கள் அத்தனைபேரையும் சிந்திக்கத் தூண்டும் சிறந்த எழுத்தோவியம்.

**கம்யூனல் ஜி. ஓ. நிலைத்தால் திராவிட இனம் வாழும்**

என்பதைத் தெள்ளத் தெளிய உணர்த்துவது.

200 பக்கங்கள் — விலை ரூ. 1—12—0

**பகுத்தறிவுப் பாசறை** பவழக்காரத் தெரு, சென்னை 1.

மாயவரம் தி. மு. க. மாநாட்டுப் பந்தலிலுள்ள போர்வாள்—பாசறை அலுவலகத்திலும் விற்கப்படும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூக்குரல் கூத்தாடியது. அவனும் மகிழ்ந்தான்.

கிராம்வெல் வசிக்கும் நகரை நோக்கி நிக்கோலஸின் குதிரை விரைந்தது... ஓடியது.... பறந்தது... பாய்ந்தது...! குதிரையின் வாயிலே வெண்ணுரை தள்ளியது. நிக்கோலஸின் முகத்திலே வியர்வை முத்துக்கள்! "வேக்கைக்காப்பாற்ற வேண்டும்" என்ற ஒரே எண்ணம் தான் அவனைப் புயலாக்கியது. இடை, இடையே வேக்கின் மனைவி கண்ணீர் சோருகின்ற 'சோகச் சித்திரம்' அவனது சிந்தனைத் திரையில் தோன்றி அவனை ஊக்குவித்தது...ஒரு நாள் பயணம்...! தூரம் நெருங்கியது.

கிராம்வெல் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். விரைக்க, விரைக்க. ஓடிவந்தான் நிக்கோலஸ். அவனது ஆடைகளில் புழுதிபடிந்திருந்தது. கண்கள் களையிழந்து தோன்றின.

"நிக்கோலஸ்! என்ன நேர்ந்தது? ஏன் இந்த பட, படப்பு?"

நிக்கோலஸ் தன் நிலையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

"வேக்கிற்கு மன்னிப்புப்பத்திரம் தாருங்கள். அல்லது என் பிணத்தையாவது பாருங்கள்! அவனைக் காப்பாற்றுவிடில் நேசம் மறந்த நீசனுவேன்! நேர்மை என்னைக் கொன்று விடும். என் மனசாட்சியைத் திருப்தி செய்ய வேறுமார்க்கமில்லை, அருள் செய்யுங்கள். என் அன்பனைக் காப்பாற்றுங்கள்."

கிராம்வெல் மன்னிப்புத்தாள் நீட்டினார்......அந்தப் பத்திரத்தில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களிடையே, புகுந்திருந்த புயல் வேக்கின் வாழ்க்கைத் தோணியை திசைமாற்றின!

"மிக்க நன்றி"...நிக்கோலஸின் ஆயிரம் எண்ணங்கள் குமிழியிட்டன!

கிராம் வெல்லின் காதுகளில் குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்டது........தேய்ந்தது...... மறைந்தது.

நிக்கோலஸ் காற்றைப் போல கடுகிச்சென்றான்! பாதையெங்கும் புழுதிப்புகை கிளம்பியது! கதிரவன் உதித்தான்! களிப்பு சிந்து பாடியபடி பறவைகள் பறந்தன!

## 3

இலண்டனில்.

வேக்கை சாவு அழைத்தது! தூக்குக் கயிறு அவனது தொண்டையை நசுக்கத் துடித்தது! கொலைமரம் கூப்பிட்டது! தள்ளாடியபடியே நடந்தான், தூக்கு மேடையை நோக்கி. வெளியே அவள் இரத்தக் கண்ணீர் வடித்தாள். அவளது மலர் இதயத்தை இரும்புக் கரங்கள் பிசைந்தன...! பைபிள் பாராயணம் முடிந்தது!... மறுகணம்...வேக் சாவின் சுழலிலே சிக்கியிருப்பான்!... நிக்கோலஸ் ஓடி வந்தான். நிறுத்தப்பட்டது, கொலை வேலை! மன்னிப்புப் பத்திரம் அதிகாரியிடம் பேசியது! வேக்கிற்கு விடுதலை!......தூக்குக் கயிறு...'மூளி'யாக ஊசலாடியது! அதற்கு ஏமாற்றம்!... சாவு அழுதது!

"நண்பா! என்னைத் தெரியவில்லையா? நிக்கோலஸ்! உன் பள்ளித் தோழன்!..."

"நிக்கோலஸ்! நீயா என்னை சாவின் பிணைப்பிலிருந்து விடுவித்தாய்? என்றால் நம்ப முடியவில்லையே!"......வேக்கின் கேள்வியிலே வியப்பு கலந்திருந்தது.

நண்பர்கள் கை குலுக்கிக் கொண்டனர்!...

"பிள்ளைப் பிராயத்தில் நீ புரிந்த உதவிக்குப்பிரதியுபகாரம் செய்துவிட்டேன்.. என் சித்தம் குளிர்ந்தது! உன் மனைவி வெளியே காத்திருக்கிறாள், உனக்காக! வா..."

நண்பர்கள் மரணக் களத்தை விட்டு வெளிவந்தனர். வேக் தன் மனைவியைத் தழுவி முத்தமிட்டான். மைந்தனை ஆசையோடு அணைத்துக்கொண்டான்.

நிக்கோலஸ் புன்னகைபூத்தான்.

"நண்பா! என் விருப்பம் நிறைவேறிவிட்டது! நான் விடை பெற்றுக்கொள்கிறேன்."

அந்த வாலிபத் தம்பதிகள்... தங்கள் வாழ்வில் வளத்தைக் கொட்டிச்செல்லும், அன்பனை புரவி மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களது விழிகளிலே நீர்வழிந்தது!...அது துன்பக் கண்ணீரல்ல; அன்புக் கண்ணீர், ஆனந்தக் கண்ணீர்!

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லுக்கு 24 பை.

உயர்த்தப்பட்டுள்ள கட்டணம்: மைலுக்கு 27 பை.

எனவே கட்டண உயர்வின் அளவு :—ரூபாய்க்கு இரண்டணா அல்லது 12½./°

### இரண்டாம் வகுப்பு

இப்போதுள்ள கட்டணம் :— மைலுக்கு 14 பை,

உயர்த்தப்பட்டுள்ள கட்டணம் : மைலுக்கு 16 பை.

எனவே, கட்டண உயர்வின் அளவு :—ரூபாய்க்கு இரண்டே காலணா அல்லது 14½./°

### மூன்றாம் வகுப்பு

இப்பொதுள்ள கட்டணம் :— மைலுக்கு 4 பை.

உயர்த்தப்பட்டுள்ளகட்டணம்:— மைலுக்கு 5 பை.

எனவே கட்டண உயர்வின் அளவு ரூபாய்க்கு காலணா அல்லது 25./.

**இப்போது உயர்த்தப் பட்டுள்ள புதிய கட்டண அளவால் கிடைக்கக் கூடிய புதிய வருமானம் :—**
ரூபாய் 19 கோடி.

**இதில், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் கட்டண உயர்வால் மட்டும் கிடைக்கக் கூடிய வருமானம் :—**
ரூபாய் 17 கோடி.

**முதல் இரு வகுப்புப் பிரயாணிகளின் கட்டண உயர்வால் கிடைக்கக் கூடிய வருமானம் :—**
ரூபாய் 2 கோடி.

இவை, அமைச்சர் கோபாலசாமியாரே தந்துள்ள புள்ளி விவரங்கள்:

இந்தப் புள்ளி விவரங்களை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டுக் கூறுங்கள், கோபாலசாமியாரின் கட்டண உயர்வு, ஏழையை வதைக்குமா, வதைக்காதா?

முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் பயணம் செய்பவர்கள், பணக்காரர்கள்; பிரபுக்கள்; சீமான்கள்; செல்வத்தில் புரளும் சிங்கார புருஷர்கள்.

மூன்றாவது வகுப்பில் பயணம் செய்பவர்கள் ஏழைகள், பாட்டாளிகள், உழவர்கள், குமாஸ்தாக்கள், மத்தியதர வகுப்பினர்:

மக்கள் நலனைக் கருதும் மக்கள் ஆட்சி நாட்டில் இருக்குமானால், அந்த ஆட்சி, முதல் இரு வகுப்புப் பிரயாணிகளின் கட்டணத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாக ஆக்கும்.

(16-ம் பக்கம் பார்க்க)

# மாஜி கடவுள்களின் அழகுப் போட்டி!

[ தங்கவேலர் ]

நாட்டுக்கும், மக்களுக்கும் தீங்கு தரும் ஏட்டைத் தீட்டி, அந்த ஏட்டின் கருத்துக்களை ஆண்டவனின் அசரீதி உரைகள் என்ற அச்சஅலையைக் கிளப்பி, மக்களின் இதயத்துக்குள்ளே வேண்டாவெறுப்போடுதள்ளிப் புதைத்துவைக்கும் புத்தறிவு பரவாத புரோகிதக்கங்காணிகள் அன்றும் இருக்கத்தான் செய்தனர்......இன்றும் இருந்துகொண்டுதானிருக்கின்றனர்!

கருத்துக்குருடரான அந்தக் கங்காணிகள்தான் அப்படியிருந்தனரென்றால், வாழ்க்கை நலத்திலே—புரியாத புதிர்நிலை நிலவும்போது, திருத்திக் கொள்ளவேண்டிய — மாற்றுநிலை காணவேண்டிய மக்களும் சூதுக்காரர்களின் ஆர்ப்பாட்ட முரசுக்கு செவிசாய்த்தனர்.

அதன் பலன்—நாடு நாச நிலைக்கு—போகிறது! எவ்வளவோ தூரத்துக்கு வாழ்க்கைச் சிரமத்தைக் குறைத்துக் கொண்டிருக்க வேண்டிய மக்கள் — மந்தி நிலையிலே உலவும்படி யாக்கப்பட்டுவிட்டனர்! நல்ல பாதையிலே படரும் முள்செடியைப்போல — தங்கள் லட்சியப்பாதையை நோக்கி நடந்துகொண்டிருந்த மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர் ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆரவாரத்தால்!

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அசந்து நின்றுவிட்ட மக்கள் பரம்பரைக்கு நன்மை உண்டாயென்றால் துளியும் இல்லை! வேண்டுமென்றால் தங்கள் வாழ்க்கையில் வசந்தம் வீசும்படி வைத்துக்கொள்வார்கள், தங்கள் ஆர்ப்பாட்டத்தின் போர்ப்பாட்டை ஏடாக, — கதையாகத் தீட்டி மக்கள் மன்றத்திலே —உலவவிட்டு காசு தேடிக்கொள்வதன் மூலமாக!

அந்தர புருடர்கள், ஜீவர்கள் என்ற பட்டங்களுக்குள்ளே புகுந்துகொண்டு பல சித்துவிளையாடல் புரிவார்கள் சிறு மதிகொண்ட இந்த சூதுக்காரர்கள்!

உடைந்த சிப்பியை எடுத்து உள்ளே முத்து இருக்கிறது என்று அவர்கள் கூறுவார்கள்! "ஓட்டைச் சிப்பிக்குள்ளே முத்தா! நன்ருகத் தெரிகிறதே உள்ளே முத்து இல்லை என்று! ஏதாவது போலியாக இருக்கும்! முத்து என்று கூறி என் சித்தத்தைக் கலக்கப்பார்க்கிருய்!" என்று யாராவது கூறிவிடக்கூடாது. பொய்யை மெய்யெனக் கூறும் அந்த மெய்யன்பர்களைப் பார்த்து!

"சபாபதி! ஆமாம் — கனகசபாபதிதான்! தில்லையில் சதுராடிய போது அந்த ஆட்டத்தைக் காண வேண்டுமே" என்று இன்று இதுபோலப் பேச்சைத் தொடரும் கனபாடிகளைப் பார்த்து, "சபாபதி சதிராடினுரா! அந்த ஆட்டத்தை நீர் பார்த்தீரா"...என்று — யாராவது கேள்வி அம்பு தொடுத்தால்..., "என் அய்யன் ஆட்டத்தை நான் பார்த்தேனே இல்லையோ, ஆனால் அவர் ஆடியது என்னவோ உண்மை" என்று பிரபந்தத்தையும், ஸ்தலபுராணத்தையும் சாட்சிக்கழைக்கும் பழமை விரும்பிகள் எத்தனை பேரை இன்றும் நம் நாட்டிலே நாம் பார்க்கிறோம்!

அவர்கள் சொல்வதை அப்படியே நம்பவேண்டும்! அதுதான் அவர்களின் முதல் திட்டம். அந்த அஸ்திவாரத்தைக் கொண்டுதான் தங்களது சூதுக் கோட்டையை அவர்கள் அமைத்துக்கொள்கிருர்கள். அவர்களின் ஏமாற்றுப் பேச்சுக்கும், எழுத்துக்கும் செவிசாய்த்தோர், இழுத்துச் சென்று அந்த சூதுக்கோட்டையில் அமைக்கப்பட்ட படுகுழியில் தள்ளப்படுகிருர்கள்.

வேதனை! நல்ல வேடிக்கையான வேதனை! பாய்ந்துவரும் வேலால் தாக்கப்பட்டு விடுவோமே என்று வேழம் கலங்கிக்கொண்டிருக்கும் நேரத்திலே—யாரோ ஒருவன் ஓடிவந்து, பாய்ந்துவரும் வேலைத் தான் தாங்கிக்கொள்வதாகக் கூறி அந்த வேலைத் தன் கரத்திலே பிடித்து நிறுத்திய அடுத்த நிமிடமே—அந்த வேலை எதிரேயுள்ள வேழத்தின் மீது முன்னையும்விட வேகமான அளவிலே பாய்ச்சினுல் என்ன நிலை!—உள்ளக் கிளர்ச்சி — ஏற்படுமோ, அது போலாயிற்று, பழமை விரும்பிகளின் பாகவதத்தைக் கேட்டோர்க்கு!

மக்கள், வாழ்க்கைக் கவலையிலே சிக்கிச் சிதைந்துகொண்டிருந்த போது அவர்கள் காதுகளிலே விழுந்தது 'காலட்சேபக் குரல்'. திரும்பிப் பார்த்தனர்...ஏதோ காது கொடுத்து வைப்போமே வென்று செவிசாய்த்தனர். ஆனுல், இழுத்துக்கொண்டுபோய் சூதுக் கோட்டைக்குள்ளே நிறுத்தப்பட்டுப் படுகுழியிலே பிடித்துத் தள்ளப்பட்டனர்.

பல நாட்டு வரலாறுகள், அங்கே உலவிய சுவடிகள் இன்றும் இதைக் கூறுகின்றன நமக்கு. நாமும் அந்த நிலையை அடைந்துவிடக்கூடாது மூளையிலே மூடுபனி மறைத்தோரின் முரசு முழக்கத்தைக் கேட்டு...என்ற எண்ணக் கண்ணோட்டம்தான் நாம் பலநாட்டு வரலாற்றிலுள்ள குறைபட்டுப் போன முறைகளை ஆராய்வதன் காரணம்.

கிரேக்க நாடு உன்னதமான நிலையிலே ஒரு காலத்திலே வாழ்ந்த நாடு. அந்த நாட்டிலே நடந்தன பல சுவையான நிகழ்ச்சிகள். அவையெல்லாம் இன்றும் கதைகளாக இருக்கின்றன! கிரேக்கர்கள் இன்று அதைப் படித்துச் சிரிக்கின்றனர்! ஆனுல், அன்று அந்த நிலையை எண்ணி எவரும் சிரிக்கவில்லை. சிரிக்க எண்ணினுல் அதுவே ஒரு பாபமாகக் கருதப்பட்டது!

அவையெல்லாம் இன்று எப்படி எப்படியோ மறைந்துவிட்டது—காலப்போக்கு செய்துவிட்ட மாற்றத்திலே!

* * *

தேவலோகத்திலே ஒரு அழகுப் போட்டி! அதிலே கலந்துகொண்டனர், ஹீரா, அதீனு, அப்ஃரோடைட் என்ற மூன்று பெண் தெய்வங்கள். அந்த மூவருக்கும் போட்டி பலமாக இருந்தது. போட்டியிட்ட மூன்று தேவிகளுமே எண்ணின—போட்டியிலே நாம்தான் வெற்றி பெறவேண்டுமென்று!

இந்த அழகுப் போட்டியிலே சிறந்த அழகியைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் பங்கு பாரிஸ் என்ற இளைஞன் தலையிலே விழுந்தது! அந்த மூன்று அழகுத் தெய்வங்களுமே உண்மையிலேயே அழகாகத் தானிருந்தனர். ஒன்றை விட மற்றொன்று எந்த வகையிலே சிறந்தது என்று கண்டுபிடிப்பது தான் பெரிய தொல்லையாகிவிட்டது பாரிசுக்கு!

பாரிஸ் நிலை கெட்டு நின்றான்! முதலிலே 'ஹீரா' வந்தாள் அவனிடம். அவன்—காதுகளிலே தன் துடிக்கும் உதடுகளைப் பதித்துப் பேசினாள்......... "பாரிஸ்! இதோ என்னைப்பார். நீ மட்டும் நான்தான் அழகில் சிறந்தவள் என்று கூறிவிடு. அதற்குக் கைமாறுபோல் அதிகாரம், அந்தஸ்து எல்லாம் உனக்குப் பெரிய அளவிலே வந்தடையும்படி செய்கிறேன்......" என்று கூறுகிறாள்.

அதைத் தொடர்ந்தே 'அதீனா' வருகிறாள். இவளும் அவன் காதருகே வார்த்தையை உதிர்க்கிறாள்......"பாரிஸ்! உன் பாதத்திலே கலைஞர்கள் எல்லோரையும் பணிய வைக்கிறேன். நீ மட்டும் நான்தான் அழகி என்று தீர்ப்பளித்துவிடு" என்று இப்படிப் பேசுகிறாள்.

அவளையும் தொடர்ந்தே 'அப்ரோடைட்' வருகிறாள். அவள் சாமர்த்தியமாகப் பேசி சாதித்துக் கொள்கிறாள் காரியத்தை!......

"ஆரணங்கு—ஹெலன்-உன்னைக் காதலிக்கும்படி செய்கிறேன்! என்னைத் தேர்விலே தேர்ந்தெடுத்துவிடு முதல்வளாக"........இப்படிப் பேசிய பேச்சுக்கு இசைந்து அவளையே அழகுத் தெய்வம் என்று தீர்ப்பளித்துவிட்டான் பாரிஸ்!

அதற்குக் கைமாறாக ஹெலனோடு காதல் வாழ்க்கை கிடைத்தது பாரிசுக்கு. ஹெலன் சாதாரண அழகியல்ல! சித்தாமணியின் அழகுக்கு ஆயிரந்தலைகள் பலியானதாக ஒரு கதை தமிழ் நாட்டிலே இருக்கிறதே "ஆயிரம் தலைவாங்கி அபூர்வசிந்தாமணி" என்ற பெரிலே அதைப்போல ஆயிரங் கப்பல்களுக்கு மேலே போரிட்டு ஒழிந்தனவாம் ஒய்யாரி ஹெலனுக்காக! ஹெலன்—அந்த சிங்காரிக்காக எத்தனையோ மாவீரர்கள் போரிட்டு அழிந்தனர். இந்த நிலையிலே இருக்கும்போது ஒரு சாதாரண பாரிஸ், அழகுத் தெய்வங்களின் போட்டியிலே தீர்ப்பளித்தான் என்ற ஒரு பெருமையைத் தவிர, வேறு எதுவும் புகழோ அல்லது திருக்கல்யாண குணமகிமைகளோ கொண்டவனல்ல! அவனிடம் "ஹெலன் உனக்குத்தான் பாரிஸ்! இந்தக் காரியத்தை எனக்கு நீ செய்து தந்தால்"........என்று யாராவது கூறினால், அது எந்தக் காரியமாகயிருந்தாலும் முடித்துத்தர ஆவலாய்த்தானிருந்தான் பாரிஸ்! அவன் ஆவலும் முடிந்தது "அப்ரோடைட்"டைப் போட்டியிலே முதல்வளாகத் தேர்ந்தெடுத்ததன் மூலமாக!

* * * *

இப்படி ஒரு கதை இருக்கத்தான் செய்தது கிரேக்க நாட்டிலே! அழகுத் தேர்வுக்காக தேவிகள் லஞ்சங் கொடுத்த கதை! தேவிகளா கூட லஞ்சங் கொடுக்கின்றனவா? லஞ்சங் கொடுப்பதும் வாங்குவதும் பாபமாயிற்றே! அதிலும் குறிப்பாக தேவிகளுக்குள்ளேயே இந்தத் தரகு வியாபாரம் நடந்தால் அது ஆபத்தாச்சே, கண்டிக்கவேண்டிய ஒரு காரியமாயிற்றே என்று மக்களும் அவர்களை நம்பும்படி தூண்டிய கருத்துக் குருடர்களும் எண்ண மறந்து போய்விட்டனர்.

கேவலம் சாதாரண மக்களுக்குத் தட்டக்கூடிய ஒரு சபலம், மக்கள் தன்மையிலிருந்து 'மாறுபட்ட' தெய்வத் திருமங்கையர்க்கு ஏற்பட்டதுதான் ஆசரியம்! அதைவிட ஆச்சரியம் போட்டியிலே அவர்கள் நேர்மையைக் கடைப்பிடிக்கத் தவறிப் போனது! இன்னும் இதைவிடப் பலமடங்கு ஆச்சரியமானது தீர்ப்பளித்த குணாரின் மனப்போக்கு—வஞ்சக வனிதையாரின் நெஞ்சத்தைப்போலே அமைந்திருந்தது.

என்ன கதை!......இல்லை இல்லை தெய்வபுராணம் அப்போதைய கிரேக்கர்களுக்கு...இதை ஏடாக்கி தேவிகளின் போட்டிபற்றி நாட்டிலே பரப்பிவிடுவதை அப்போதையர் பெருமை கொண்டனர்.......... இப்போதைய நம் நாட்டு பழமை விரும்பிகளைப் போல! கனகசபாபதியின் சதிராட்டம், கயிலைநாதரின் திருத்தாண்டவம், கனகமயில் வாகனனும்—கணபதியும் செய்து கொண்ட ஊடல், மயிலேறு முருகரின் மனதுக்கு கந்தமாதரசியை—மயக்க—வேலன், வேடன் விருத்தனை திருப்படலம்......இவையெல்லாம் இன்றும் நம் நாட்டிலே கதையல்ல—கடவுளரின் உண்மைத் திருஅவதார மகிமைகள் என்று நம்பி அவற்யைப் பிறரிடம் பேசவும் ஏடுகளிலே எழுதவுமான நிலையிலே நம்மிடையே பலர் வாழ்கின்றனரே—இதுபோலத்தான்—பாரிஸ் தீர்ப்பளித்த போட்டியும் அதிலே கலந்து கொண்ட தேவிகளும்...... லீலைகள் எடுத்தனரென அப்போபோதைய கிரேக்கர்கள் நம்பினர்.

"அகல்யாவின் வாழ்க்கைத் தோழர் முனிவர் என்று கூறுகிறீர்களே.........முற்றும் துறந்தவராயிற்றே அவர்! அவருக்கா ஒரு அழகி அகல்யா தேவைப்பட்டாள்! தேவைப்படலாமா அந்த முனிவருக்கு இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி! சேவைக்குத்தானே அந்த மாமுனி வைத்துக் கொண்டாரென்றால் அவரின் திருச்சேவைக்கு ஒரு பாவை தானா தேவைப்பட்டாள்! இதுதான் போகட்டுமே தேவர்தலைவன் இந்திரன் இச்சை கொண்டானே தளிர்மேனி அகலியைமேல்........இது தேவர்கள் இலக்கியத்துக்கேகளங்கமாக இல்லையா......" என்று இன்று இதுபோல நாம் பழமைத் தோழர்களைப் பார்த்துக் கேள்வி அம்பு தொடுக்கிறோமே, இதுபோலத்தான் கிரேக்க நாட்டிலே கேள்வி அம்பு பாய்ந்து பாய்ந்து புரோகிதப் புலிகளைத் தாக்கியதால்தான் அங்கு இப்போது பாரிஸ்—ஹெலன்—அதீனா எல்லோரும் கண் காட்சிசாலையிலே வைத்து கேலி பேசும் நிலையிலே இருக்கிறார்கள்.

அந்த நிலை நம்மிடையே இன்று வளர வேண்டும். அதற்கான முதல் வழி சிந்திக்கத் தூண்டும் அறிஞர்களின் கருத்தோவியங்களை சிந்தையிலே குடி ஏற்றிக் கொள்ளவேண்டும். இன்று நம்மைச்சுற்றிக் காளியும், மாரியும் உலவுகின்றனர் அதை ஒட்டியே உடுக்கை தட்டும் உழைப்பறியா உலுத்தர்களும் இருக்கக் காண்கிறோம். இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அடக்கப்பட்டு அவர்கள் கூச்சல் அடங்கிக் கொண்டிருக்கும் போதே காளியும் மாரியும் கண்காட்சி சாலைக்கு அனுப்பப்பட வேண்டும். அப்போதுதான் இங்கும் மறுமலர்ச்சி மலரும்.

உலக வரலாறு இதை நமக்குக் காட்டுகிறது. பல நாடுகளின் காட்சிசாலையிலே நின்றுகொண்டிருக்கும் "மாஜி கடவுள்கள்" இதைத்தான் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்!

# சிந்திக்கத் தூண்டும் சிறந்த வெளியீடுகள்

## அறிஞர் அண்ணா

| | ரூ. | அ. |
|---|---|---|
| சமுதாயப் புரட்சி | 0 | 4 |
| தேவலீலைகள் | 0 | 8 |
| அண்ணா கண்ட தியாகராயர் | 0 | 4 |
| மகாகவி பாரதியார் | 0 | 6 |
| சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் | 0 | 2 |
| விதிக்கு அடிமைத்தனம் | 0 | 2 |
| கல்வியும் அரசாங்கமும் | 0 | 6 |
| மறுமலர்ச்சி | 0 | 4 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 | 8 |
| அறநிலையங்கள் | 0 | 4 |
| சொல்வதெல்லாம் செய்தல் சுந்தரம் | 0 | 2 |
| பொது சேவையா சொந்தத் தொழிலா | 0 | 2 |
| காடும் ஏடும் | 0 | 6 |
| Peoples Poet | 0 | 3 |
| வந்தது விபத்து | 0 | 12 |
| மாணவர் பற்றி அண்ணா | 0 | 3 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 |
| நால் நிலையங்கள் | 0 | 3 |
| பொருள் | 0 | 4 |
| அண்ணாவும் இராவண காவியமும் | 0 | 2 |
| அண்ணா அறை கூவல் | 0 | 2 |
| திராவிடர் நிலை | 0 | 8 |
| தோழமையா விரோதமா | 0 | 4 |
| அண்ணா சொல்வன்மை | 0 | 5 |
| அண்ணா பேச்சு வெற்றி ரகசியம் | 0 | 3 |
| அண்ணா வர்ணனைகள் | 0 | 3 |
| அண்ணா உவமைகள் | 0 | 8 |
| அண்ணா நகைச்சுவை | 0 | 3 |
| சமதர்மம் | | |
| தீண்டாமை | | |
| ஸ்தாபன ஐக்யம் | | |
| வாலிபர் தேவை | | |
| வீட்டிற்கோர் புத்தகசாலை | | |
| என்னை கவர்ந்த புத்தகங்கள் | | |
| மகாத்மா காந்தி | | |
| மேடைப்பேச்சு | | |
| எமிலி ஜோலா | 0 | 6 |

(சமதர்மம் முதல் மேடைப்பேச்சு வரை: ஒவ்வொன்றும் விலை 1½ அணா)

| | ரூ. | அ. |
|---|---|---|
| புதிய பாதை | 0 | 10 |
| நம்பரும் வம்பரும் | 0 | 4 |
| மக்கள் மறுமலர்ச்சி | 0 | 3 |
| மனப்போக்கு மாறவேண்டும் | 0 | 4 |

## இரா. நெடுஞ்செழியன் M. A.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மொழிப் போராட்டம் | 1 | 0 |
| களஞ்சியம் | 0 | 8 |

## மு. கருணாநிதி

| | ரூ. | அ. |
|---|---|---|
| கயிற்றில் தொங்கிய கணபதி | 0 | 2 |
| ஒரே முத்தம் (நாடகம்) | 1 | 4 |
| சங்கிலிச்சாமி | 0 | 8 |
| தூக்குமேடை (நாடகம்) | 1 | 4 |
| பெரிய இடத்துப் பெண் | 0 | 8 |
| வாழமுடியாதவர்கள் | 0 | 8 |
| பலிபீடம் நோக்கி | 0 | 6 |
| தப்பிவிட்டார்கள் | 0 | 8 |
| கோவையில் கருணாநிதி | 0 | 8 |
| தலைமை உரை | 0 | 2 |
| நச்சுக் கோப்பை | 0 | 1½ |

## ஏ. வி. பி. ஆசைத் தம்பி

| | ரூ. | அ. |
|---|---|---|
| கொலைகாரி | 0 | 12 |
| பயங்கர வாழ்வு | 0 | 8 |
| அவள் வாழ்வு | 0 | 8 |
| திராவிடர் கழகம் ஏன் | 0 | 8 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 |
| இருண்ட வாழ்வு | 0 | 12 |
| வரண்ட வாழ்க்கை | 0 | 8 |
| ஆண்களை நம்பலாமா | 0 | 3 |
| அன்பழகன் ஆட்சி | 1 | 4 |

## தில்லை வில்லாளன்

| | ரூ. | அ. |
|---|---|---|
| அவள் | 0 | 8 |
| சாவோலை | 0 | 8 |
| கழுதை ஊர்வலம் | 0 | 8 |
| அத்திப்பூக்கள் | 0 | 12 |
| திருடர்கள் ராஜ்யம் | 0 | 6 |

## இராதாமணாளன்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இளவரசி | 1 | 8 |
| மனப்புயல் | 1 | 8 |
| பொற்சிலை | 1 | 0 |
| ருஷ்ய நாட்டழகி | 0 | 8 |
| இன்பக் கனவு | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| துளி தேன் | 0 | 8 |
| பெண் | 0 | 8 |
| மயானத்தில் முத்தம் | 0 | 8 |
| ஐயோ கடவுளே | 0 | 3 |
| மதம் அவசியமா | 0 | |

**பகுத்தறிவுப் பாசறை** பவழக்காரத் தெரு, சென்னை 1.

13-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றும் வகுப்பினரின் கட்டணத்தை எவ்வளவு குறைவாக முடியுமோ அவ்வளவு குறைவாக ஆக்கும்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்களோ ஏழைகள் செல்லும் வகுப்பின் கட்டணத்தை நான்கு விதம் அதிகப்படுத்திவிட்டு, செல்வர்கள் செல்லும் வகுப்பின் கட்டணத்தை இரண்டணமட்டும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஏழைகளிடமிருந்து 17 கோடி ரூபாயைக் கசக்கிப் பிழிந்து கொண்டு டாடாக்களிடமிருந்து 2 கோடிமட்டும்தான் கேட்டு வாங்குகிறார்கள். தாங்கக் கூடியவர்கள் பணக்காரர்கள்—ஆனால்அவர்களுக்குக்குறைந்தபளு.

தாங்கமுடியாதவர்கள் ஏழைகள்—ஆனால் அவர்களுக்கோ, அதிகமான பளு!

பணமூட்டைகளுக்குச் சலுகை, ஏழை எளியவர்கட்கு வேதனை!

குமாரராஜாக்களுக்கும் அழகப்பாகளுக்கும் குறைந்த கட்டண உயர்வு!

கூலி வேலைக் காரர்களுக்கும் குமஸ்தாக்களுக்கும் அதிக கட்டண உயர்வு!

**தில்லாலங்கடி தில்லாலங்கடி**
**தில்லாலங்கடி தில்லாலே!**
**தேசம் போற போக்கைப் பார்த்தா**
**பேசக் கூட நல்லா'ல்லே!**

திக்கெட்டும் புகழ்ஒளியைப் பரப்பிய வண்ணம் வெற்றி பவனி வந்துகொண்டிருக்கும் "[illegible]" திரைப்படத்திலே, அந்தக் கதையிலே வரும் ஏதோ ஒரு தேசத்தின் ஆட்சியாளர்கள் நடந்து கொள்ளும் அக்கிரமப் போக்கைக் கண்டு மனம்தாளாத யாரோ ஒருவன் இப்படிப் பாடுகிறான்.

கோபாலசாமியாரின் வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தபிறகு அந்தப் பாட்டுதான் நம் நினைவிற்கு வருகிறது. உண்மையிலேயே நம் தேசத்தின் நிலை, அந்தக்கதையிலே வரும் தேசத்தின் நிலையைப்போலத் தான் இருக்கிறது.

ஆமாம் நண்பர்களே, நம் தேசம் போற போக்கைப் பாத்தா, அதாவது நம் தேச ஆட்சிபோற போக்கைப்பாத்தா, பேசக்கூட நல்லால்லே, ஆமாம், பேசக்கூட நல்லால்லே!

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hons)